# நிகரன்

19






அக்டோபர், 2017
தனிச்சுற்று

# உள்ளே..

பாட்டாளிவர்க்கக் கண்ணோட்டத்தில் தேசிய இன வேலைத் திட்டம்

☐

தனிநபர்வாதம்: சில குறிப்புகள்

☐

ஏகாதிபத்தியம், தொழிலாளர் பிரபுக்குலம், முதலாளித்துவத் தொழிலாளர் கட்சிகள், சமூக-தேசியவெறி மற்றும் சந்தர்ப்பவாதம் ஆகியவற்றுக்கு இடையேயான உறவு குறித்து..

☐

'சார்பற்ற, நடுநிலையான' சுதந்திரம், ஜனநாயம், சமத்துவம், சமாதானம் என்ற முழக்கங்கள் மக்களை ஏமாற்றுபவை!

☐

கவுரி லங்கேஷ்: தொடரும் இந்துத்துவ எதிர்ப்பாளர் படுகொலைகள்

☐

விளக்கக் குறிப்புகள்

☐



## கட்சி இலக்கியக் கோட்பாடு

*“கட்சி இலக்கியம் என்னும் கோட்பாடு என்பதென்ன? சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்துக்கு, இலக்கியமானது தனியாட்கள் அல்லது குழுக்கள் செல்வம் திரட்டிக் கொள்வதற்குரிய ஒரு சாதனமாய் இருக்க முடியாது என்பது மட்டுமல்ல இக்கோட்பாடு, உண்மையில் இலக்கியமானது பாட்டாளி வர்க்கத்தின் பொதுக்குறிக்கோளைச் சாராத ஒன்றாய், தனியாள் முயற்சியாய் இருக்க முடியாது என்பதும் ஆகும். கட்சி சார்பில்லா மனப்பாங்குடைய எழுத்தாளர்கள் ஒழிக!! இலக்கியத்துறை மீமனிதர்கள் ஒழிக! (Down with Literary Supermen!) இலக்கியமானது பாட்டாளி வர்க்கத்தினது பொதுக்குறிக்கோளின் ஒரு பகுதியாக வேண்டும், தொழிலாளி வர்க்கம் அனைத்தின் அரசியல் உணர்வு கொண்ட முன்னணிப் படை அனைத்தாலும் இயக்கப்படும் தனியொரு மாபெரும் சமூக-ஜனநாயகப் பொறியமைவைச் சேர்ந்த “பல் சக்கரமும் திருகும்” ஆகிவிட வேண்டும். ஒழுங்கமைந்த, திட்டமிடப்பட்ட, ஒருமித்த சமூக-ஜனநாயகக் கட்சிப் பணியில் இலக்கியம் ஒரு கூறாகிவிட வேண்டும்...*

**தோழர் லெனின்**

# பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் தேசிய இன வேலைத் திட்டம்

(தேசிய இனப் பிரச்சினை குறித்து **தோழர் லெனின்** அவர்கள் பகிர்ந்துகொண்ட பல்வேறு கருத்துக்களின் சுருக்கமான தொகுப்பு)

**பா**ட்டாளி வர்க்கத்தின் கண்ணோட்டத்திலிருந்து நாம் தேசிய இன வேலைத்திட்டத்தை வகுத்து அமைத்து வருகிறோம்.

தொழிலாளர் பிரச்சினையுடன் ஒப்பிடும்போது தேசிய இனப் பிரச்சினைக்கு உரியது இரண்டாம் இடமே என்பதில் மார்க்சுக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால், அவரது தத்துவம் தேசிய இன இயக்கங்களைப் புறக்கணித்ததே கிடையாது.

தேசியவாதம் எவ்வளவுதான் 'நியாயமான', 'பரிசுத்தமான', 'நயமான' நாகரிக வகைப்பட்டதாய் இருப்பினும், அதனுடன் மார்க்சியத்தை இணக்கமுடையதாக்க முடியாது. எல்லா வகையான தேசியவாதத்துக்கும் பதிலாக மார்க்சியம் சர்வதேசியவாதத்தை முன்வைக்கிறது. எல்லாத் தேசிய இனங்களும் உயர்நிலை ஒற்றுமையில் ஒன்றிணைவதை முன்வைக்கிறது.

பல்வேறு தேசிய இனங்களையும் சேர்ந்த முதலாளிகளும் கூட்டுப் பங்குக் கம்பெனிகளில் உட்கார்ந்து முழு அளவுக்கு ஒன்று கலக்கின்றனர். பல்வேறு தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் ஆலைகளில் ஒன்று சேர்ந்து வேலை செய்கின்றனர். மெய்யாகவே முனைப்புக்குரிய ஆழ்ந்த அரசியல் பிரச்சினைகள் யாவற்றிலும் வர்க்கங்களின் அடிப்படையில் தரப்புகள் உருவாகின்றனவே அன்றி, தேசிய இனங்களின் அடிப்படையில் அல்ல.

தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கும், முதலாளித்துவத்திற்கு எதிரான அதன் போராட்டத்தின் நலன்களுக்கும் எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின் ஆக நெருக்கமான ஒற்றுமையும் பூரண ஒருமைப்பாடும் இன்றியமையாதவை. ஒவ்வொரு தேசிய இனத்தையும் சேர்ந்த முதலாளி வர்க்கத்தின் தேசியவாதக் கொள்கையையும் எதிர்த்துப் போராட வேண்டும் என்று அந்நலன்கள் கோருகின்றன.

பொதுவாக தேசியவாதம் பற்றிய பிரச்சினையைக் கருத்தியலாக முன்வைப்பதால் எவ்விதப் பயனும் இல்லை. ஒடுக்கும் தேசிய இனத்தின் தேசிய வாதத்திற்கும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தேசிய வாதத்துக்கும் இடையே, ஒரு பெரிய தேசிய இனத்தின் தேசிய வாதத்துக்கும் ஒரு சிறிய தேசிய இனத்தின் தேசியவாதத்திற்கும் இடையே வேறுபாடு காணவேண்டியது அவசியமாகும்.

ஒடுக்கப்படும் தேசியஇனத்தின் முதலாளித்துவ தேசியவாதத்தை ஆதரித்துவிடுவோமோ என்ற அச்சத்தில் பலர் ஒடுக்கும் தேசிய இனத்தின் தேசியவாதத்தை ஆதரித்துவிடும் தவறை செய்கின்றனர்.

தங்களை மார்க்சியவாதிகள் என்று சொல்லிக்கொள்ளும் பலருடைய அகநிலை நல் எண்ணங்கள் என்னவாக இருப்பினும், தேசிய இன ஒடுக்குமுறையைக் கண்டுகொள்ளாமல் இருக்கும் தங்களது தட்டிக்கழிக்கும் போக்கினால், அவர்கள் தேசியஇனங்களை ஒடுக்கும் ஏகாதிபத்தியத்தைப் புறநிலை ரீதியில் ஆதரிக்கிறார்கள். ஏகாதிபத்திய சகாப்தமானது எல்லாப் பெரும் வல்லரசுகளையும் பல தேசிய இனங்களை ஒடுக்குபவைகளாக மாற்றிவிட்டது.

## பெரிய அரசுகளே மார்க்சியர்களின் விருப்பம்

மற்ற எல்லா நிலைமைகளும் சரிசமமாக இருந்தால் சிறிய அரசுகளைவிடப் பெரிய அரசுகளை மார்க்சீயவாதிகள் இயல்பாக விரும்புகிறார்கள்.

மார்க்சியவாதிகள், எந்த நிலைமைகளிலும் கூட்டரசுக் கோட்பாட்டையோ, அதிகாரப் பரவலையோ ஆதரித்து நிற்க மாட்டார்கள். மையத்துவமடைந்த பெரிய அரசானது, மத்திய கால ஒற்றுமையின்மையிலிருந்து அனைத்து உலகின் வருங்கால சோசலிச ஒற்றுமையை நோக்கி அமைந்த பிரமாண்டமான வரலாற்று வழியிலான முன்னேற்ற அடியாகும். இம்மாதிரியான அரசின் மூலம் மட்டுமே சோசலிசத்திற்கான எந்தப் பாதையும் அமையமுடியும்.

ஆனால் மையத்துவத்தை ஆதரித்து நிற்கையில் நாம் முழுக்க முழுக்க ஜனநாயக மையத்துவத்தையே ஆதரித்து நிற்கிறோம் என்பதை மறப்பது மன்னிக்க முடியாததாகும்.

ஜனநாயக மையத்துவம் வட்டார சுயாட்சியையும், அதனுடன் விசேசப் பொருளாதார, சமுதாய நிலைமைகளையும், வாழும் மக்களது திட்டவட்டமான தேசிய இன இயைபினையும், இன்ன பிறவற்றையும் கொண்ட பிராந்தியங்களுக்குத் தன்னாட்சியையும் மறுக்கவில்லை என்பது மட்டுமல்ல, முன்னதையும் பின்னதையும் அத்தியாவசியமென்றுகூறி இரண்டையும் கோருகிறது.

## பொது மொழி என்பது மக்கள் விரும்பி ஏற்பதே

குறிப்பிட்ட ஒரு நாட்டில், வாணிப உறவுகளின் நலன்களை முன்னிட்டு எந்த மொழி தெரிந்திருந்தால் பெரும்பாலோருக்கு அனுகூலமாய் இருக்கும் என்பதைப் பொருளாதராப் பரிவர்த்தனையின் தேவைகள் தாமாகவே தீர்மானித்துக் கொண்டுவிடும். பல்வேறு தேசிய இனங்களாலுமான அந்நாட்டு மக்கள் தாமே விரும்பி ஏற்கும் தீர்மானமாக அது அந்த அளவுக்கு உறுதிமிக்கதாக இருக்கும்.

## கலாச்சார தேசிய இனத் தன்னாட்சி

‘கலாச்சார தேசிய இனத் தன்னாட்சி’ என்ற செயல்திட்டத்தை நாம் எதிர்க்கிறோம். நிலப்பரப்பின் அடிப்படையில் தேசிய இனத் தன்னாட்சி என்பதை ஏற்கிறோம்.

‘கலாச்சார தேசிய இனத் தன்னாட்சி’ என்றால், மிகமிகத் துல்லியமாக்கப்பட்ட, எனவே மிகவும் தீமையை விளைவிக்கத்தக்க தேசியவாதம் என்று பொருள்படும். தேசிய இனக் கலாச்சாரம் என்ற கோஷத்தின் மூலம் தொழிலாளர்களின் வர்க்க உணர்வைக் கெடுத்துவிடுவது, தேசிய இனப் பாகுபாட்டின்படி பள்ளிகளைப் பிரித்து வேறுபடுத்த வேண்டும் என்ற மிகவும் தீமைதரத் தக்கதும் ஜனநாயகத்துக்கு முரணானதுமான பிரச்சாரம் என்றே அர்த்தப்படும். சுருங்கக் கூறினால், இது

சந்தேகத்துக்கு இடமின்றி பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியவாதத்திற்கு முரண்படுகிறது. இது தேசியவாதக் குட்டி பூர்ஷ்வாக்களின் லட்சியங்களுடன் மட்டும் இணைந்ததாக இருக்கிறது.

ஆனால், மார்க்சியவாதிகள், ஜனநாயகத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் துரோகம் செய்யாமல் இருக்க விரும்பினால், தேசிய இனப் பிரச்சினையில் ஒரு விசேஷக் கோரிக்கையை ஆதரித்துப் போராட வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கும் ஒரு சந்தர்ப்பம் உள்ளது. அதுதான் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, அதாவது, அரசியல் ரீதியாகப் பிரிந்துபோகும் உரிமை.

## சுயநிர்ணய உரிமையும் பிரிவினை எதிர்ப்பும்

சுயநிர்ணய உரிமை என்றால், ஒரு மத்தியப் பாராளுமன்றத்தில் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று அர்த்தம் இல்லை. பிரிந்து போகும் சிறுபான்மையினருடைய பாராளுமன்றத்தில் அல்லது சபையில் அல்லது அவர்களுக்கிடையில் நடத்தப்படும் பொதுமக்கள் வாக்கெடுப்பில் தீர்வுகாண வேண்டும் என்பதுதான் அர்த்தம்.

ஜனநாயக முறையிலான வாக்கெடுப்பினால் பிற்போக்குவாதிகள் பெரும்பான்மை பெற்றால் கீழ்க்கண்ட இரண்டில் ஒன்று நடக்கக்கூடும். ஒன்று, பிற்போக்குவாதிகளின் முடிவு அமுலாக்கப்பட்டு அதன் தீய விளைவுகளினால் மக்கள், ஜனநாயகத்தை நோக்கியும் பிற்போக்குவாதிகளுக்கு எதிராகவும் அநேகமாகச் சென்றுவிடுவார்கள் அல்லது ஜனநாயகத்துக்கும் பிற்போக்குக்கும் இடையிலான போராட்டம் ஒரு உள்நாட்டுப் போர் அல்லது வேறு ஒரு போரினால் முடிவு கட்டப்படும்.

இந்த உரிமையை அங்கீகரிப்பதானது, பிரிவினையை எதிர்த்துப் பிரச்சாரம், கிளர்ச்சி செய்வதையோ அல்லது பூர்ஷ்வா தேசியவாதத்தை அம்பலப் படுத்துவதையோ சற்றும் விலக்கிவிடாது.

## சிறப்புரிமைகள் சமத்துவத்திற்கு எதிரானது

எந்த தேசிய இனத்துக்கும் எந்த மொழிக்கும் எவ்விதமான தனியுரிமைகளும் கூடாது, தேசிய இனங்களின் சுயநிர்ணயம் முழு அளவுக்குச் சுதந்திரமாகவும், ஜனநாயகமான வழியிலும் தீர்க்கப்பட வேண்டும்.

எந்த ஒரு தேசிய இனத்துக்கும் எந்த விதமான சிறப்புரிமையும் அளிப்பதும், தேசிய இனங்களின் சமத்துவத்துக்கு அல்லது தேசிய இனச் சிறுபான்மையினரது உரிமைகளுக்கு ஊறு செய்யும் எந்த நடவடிக்கையும் சட்டவிரோதமாக அறிவிக்கப்படவேண்டும். இதனைச் செயல்படுத்த முயலுவோர் குற்றவாளிகள் எனத் தண்டிக்கப்பட வேண்டும் என்று கோர எந்தக் குடிமகனுக்கும் உரிமை அளிக்கும் சட்டம் ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

## தேசிய இனங்களில் வர்க்கங்களைப் பார்த்தல்

ஒவ்வொரு தேசிய இனத்திலும், உழைப்போரும், சுரண்டப்படுவோருமான மக்கள் திரளினர் இருக்கிறார்கள். இவர்களது வாழ்க்கை நிலைமைகள் தவிர்க்க முடியாமல் ஜனநாயக, சோசலிச சித்தாந்தத்தை உதித்தெழச் செய்கின்றன. அதுபோல, ஒவ்வொரு தேசிய இனத்திலும் பூர்ஷ்வாக் கலாச்சாரமும் இருக்கிறது. அது பாரம்பரியம், சமயம் இவற்றின் வடிவில் ஆதிக்கம் செலுத்துகிறது. முதலாளி வர்க்கத்தாரின் நலன்கள் அனைத்தும்தான் வர்க்கச் சார்பற்ற தேசிய இனக் கலாச்சாரத்தில் நம்பிக்கையை வளர்க்க வேண்டுமெனக் கோருகிறது.

நாம், தேசிய இனக் கலாச்சாரம் ஒவ்வொன்றின் இடமிருந்தும் அதன் ஜனநாயக,

சோசலிசக் கூறுகளை மட்டும்தான் எடுத்துக் கொள்கிறோம். ஒவ்வொரு தேசிய இனத்துக்குமான சுரண்டும் வர்க்கக் கலாச்சாரத்தையும், சுரண்டும் வர்க்கங்களின் தேசியவாதத்தையும் நிபந்தனையின்றி எதிர்ப்பதற்காக மட்டும்தான் அவற்றை எடுத்துக் கொள்கிறோம்.

## தேசிய இனங்களின் தொழிலாளர்களின் ஒற்றுமை

பாட்டாளி வர்க்கத்துக்குப் பணிபுரிய விரும்புவோர் எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களையும் ஒன்றுபடச் செய்ய வேண்டும். சொந்த தேசிய இனத்தின் தேசியவாதம் என்றாலும் அந்நிய தேசிய இனத்தின் தேசியவாதம் என்றாலும் சுரண்டும் வர்க்கங்களின் தேசியவாதத்தை எதிர்த்துச் சிறிதும் பிறழாமல் போராட வேண்டும். தேசிய இனக் கலாச்சாரம் என்ற முழக்கத்தை ஆதரிப்போர் இருக்க வேண்டிய இடம் குட்டி முதலாளித்துவப் பகுதியோர் மத்தியிலே அன்றி, மார்க்சிய வாதிகள் மத்தியில் அல்ல.

ஒரு பெருந்தேசியஇனத்தின் மார்க்சியவாதியான ஒருவர் தனது பெருந்தேசிய இனத்தின் தேசிய இனக் கலாச்சாரம் என்ற முழக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியுமா? முடியாது. ஏற்றுக் கொள்கிறவர் எவரும் தேசியவாதிகளின் அணிகளில் இருக்க வேண்டுமே அன்றி, மார்க்சியவாதிகளது அணிகளில் அல்ல.

நமது பணி, ஒரு பெருந்தேசிய இனத்தின், ஆதிக்கம் செலுத்தக்கூடிய, சுரண்டும் வர்க்க தேசியஇனக் கலாச்சாரத்தை எதிர்த்துப் போராடுவதும், முழுக்க முழுக்க சர்வதேசிய மனப்பாங்கிலும் ஏனைய நாடுகளது தொழிலாளர்களுடன் மிக நெருங்கிய கூட்டுறவு கொண்டு வளர்ச்சி அடைவதும்தான்.

குறிப்பிட்ட ஒரு நாட்டின் எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் ஒன்றுபட்ட தொழிலாளர் நிறுவனங்களில் ஐக்கியம் அடையவும், ஒருங்கிணையவும் வேண்டும்.

## முதலாளித்துவ வளர்ச்சியின் இரண்டு போக்குகள்

வளர்ந்து செல்லும் முதலாளித்துவமானது, தேசிய இனப் பிரச்சினையில் இரண்டு வரலாற்றுப் போக்குகளை அறிந்திருக்கிறது. (1) தேசிய இன வாழ்க்கையும், தேசிய இன இயக்கங்களும் துயிலெழுதலும், எல்லாவிதமான தேசிய இன ஒடுக்குமுறைக்கும் எதிராய்ப் போராட்டம் மூளுதலும், தேசிய இன அரசுகள் அமைக்கப்படுதலும். (2) எல்லா வடிவங்களிலும் தேசிய இனங்களிடையே ஒட்டுறவு வளர்ந்து மேலும் மேலும் துரிதமாதலும், தேசிய இனப் பிரிவினைச் சுவர்கள் தகர்க்கப்படுதலும், மூலதனத்தின், பொதுவாகப் பொருளாதார வாழ்வின், அரசியல், விஞ்ஞானம் முதலானவற்றின் சர்வதேச ஒற்றுமை உண்டாக்கப்படுதலும். இவையிரண்டும், முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்திற்குரிய உலகம் தழுவிய விதிகளாகும். முதலாம்விதி, முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்திலும், பின்னது, முதிர்ச்சியடைந்த சோசலிசத்திற்கு மாறும் கட்டத்திற்கு அன்மையிலிருக்கும் முதலாளித்துவத்தின் இயல்பாகவும் இருக்கிறது.

## மார்க்சியவாதிகளின் தேசியஇன வேலைத்திட்டம்

மார்க்சியவாதிகளின் தேசிய இன வேலைத்திட்டம் இவ்விரு போக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, பின்வருவனவற்றுக்காகப் பாடுபடுகிறது.

(1) தேசிய இனங்களின், மொழிகளின் சமத்துவத்திற்காகவும், இங்கு எந்தவிதமான தனியுரிமைகளும் அனுமதிக்கப்படலாகாது என்பதற்காகவும் மற்றும் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைக்காகவும்.

(2) சர்வதேசியவாதம் என்னும் கோட்பாட்டுக்காகவும், பூர்ஷ்வா தேசியவாதத்தால் பாட்டாளி வர்க்கம் நச்சுப்படுத்தப் படுவதை எதிர்த்து இணக்கத்துக்கு இடமில்லாத போராட்டம் நடத்த வேண்டும் என்பதற்காகவும்.

## 'ஒன்றுகலத்தல்' வரலாற்று வழியில் முற்போக்கானதாகும்

தேசியவாதத் தப்பெண்ணங்களால் மூழ்கடிக்கப்படாதவர் எவரும், முதலாளித்துவமானது தேசிய இனங்களை ஒன்றுகலக்கச் செய்திடும் நிகழ்ச்சிப் போக்கு வரலாற்று வழிப்பட்ட மாபெரும் முன்னேற்றத்தைக் குறிப்பதாகும் என்பதை அங்கீகரிப்பார்.

தேசிய இனங்களின், மொழிகளின் சமத்துவத்தை அங்கீகரிக்காத, அதற்காகப் போராடாத எவரும், எல்லாவிதமான தேசிய இன ஒடுக்குமுறையையும், சமத்துவமின்மையையும் எதிர்த்துப் போராடாத எவரும் மார்க்சியவாதி அல்ல, ஜனநாயகவாதியும்கூட அல்ல. அது சந்தேகத்திற்கு இடமில்லாதது. ஆனால், பிறிதொரு தேசிய இனத்தைச் சேர்ந்த மார்க்சியவாதி 'ஒன்றுகலத்தலை' ஆதரித்து நிற்பதாகச் சொல்லி அவரை நிந்தனை செய்யும் போலி மார்க்சியவாதி தேசியவாத அற்பரே ஆவார் என்பதும் அதேபோல சந்தேகத்துக்கு இடமில்லாதது.

## தேசிய இன அடிப்படையிலான வெறுப்பு

ஒரு ஒடுக்கப்படும் தேசியஇனத்தின் மார்க்சியவாதிக்கு, பெருந்தேசிய ஒடுக்குமுறையாளர்கள் மீதுள்ள வெறுப்பு முற்றிலும் நியாயமானது, இயற்கையானது. ஆனால், பெருந்தேசிய இனத் தொழிலாளர்களின் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்திற்கும், பாட்டாளி வர்க்க லட்சியத்திற்கும் எதிராக இந்த வெறுப்பினை இம்மியளவு எடுத்துச் செல்லும்படி இவ்வெறுப்பால் அந்த அளவுக்குத் தாம் ஆட்கொள்ளப் படுவதற்கு அனுமதிப்பவராயின், பிறகு அந்த மார்க்சியவாதி சுரண்டும்வர்க்க தேசியவாதச் சகதிக்குள்தான் வழுக்கிச் சென்று விடுவார். அதுபோல, பெருந்தேசிய இன மார்க்சியவாதி ஒருவர் ஒடுக்கப்படும் தேசிய இனத்திற்கு முழு நிறை சமத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையோ, சுதந்திர அரசை அமைத்துக் கொள்ள அவர்களுக்கு இருக்கும் உரிமையையோ கணமும் மறப்பாராயின், அவர் சுரண்டும் வர்க்க தேசியவாதச் சகதிக்குள் மட்டுமின்றி இனவாத சகதிக்குள்ளும் வழுக்கிச் சென்றுவிடுவார்.

■

**டேவிட் லாய்ட் ஜார்ஜ்** (17-01-1863 – 26-03-1945): ஐந்தாம் ஜார்ஜ் மன்னராக இருந்த காலத்தில் இங்கிலாந்து நாட்டின் லிபரல் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதி, பாராளுமன்ற உறுப்பினர். 06-12-1916 முதல் 19-10-1922 வரையான காலத்தில் இங்கிலாந்தின் பிரதமராக இருந்தவர். எனவே முதலாம் உலக மகா யுத்தத்தில் முக்கியப் பங்காற்றியவர். யுத்த காலத்தில் பழமைவாதக் கட்சியுடன் (Conservative Party) இணைந்து கூட்டணி அரசாங்கத்தை அமைத்தார். நவீன கால நலஅரசுகள் (Welfare States) என்று அறியப்படும் அரசுகளுக்கு முன்மாதிரியாகப் பல சீர்திருத்த நடவடிக்கைகளை இங்கிலாந்தில் அறிமுகப் படுத்தியவர்.



# தனிநபர்வாதம்

## சில குறிப்புகள்

(வியத்நாமின் வீரத் தலைவன், தோழர் ***ஹோ சி மின்*** அவர்களால் எழுதப்பட்டு ***கட்சி வாழ்க்கை*** என்ற மாதம் இருமுறை ஆங்கில இதழில், 1978 பிப்ரவரி 7ல் வெளியான ஒரு கட்டுரையிலிருந்து சுருக்கித் தொகுக்கப்பட்டது.)

மனித இனம் தோன்றியதிலிருந்தே, தான் தொடர்ந்து வாழ கொடிய விலங்குகளையும், இயற்கைச் சீற்றங்களையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற ஒவ்வொரு தனிநபரும் பெரும்பான்மையான மக்களின் சக்தியையும், கூட்டுத் தன்மையையும், சமுதாயத்தையும் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தன்னந்தனியாக மனிதன் இயற்கையின் பெரும்பலனை அடைந்து அனுபவித்து வாழ்வது முடியாது.

தொடர்ந்து உயிர் வாழ வேண்டுமானால் உணவு, உடை கிடைக்க மனிதன் கட்டாயமாக உற்பத்தியில் ஈடுபட வேண்டும். உற்பத்தியோ, சமுதாயத்தின் கூட்டுத் தன்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. தன்னந்தனியே மனிதன் உற்பத்தியில் ஈடுபட முடியாது.

நமது சகாப்தம் நாகரிகமான, புரட்சிகரமான சகாப்தமாக இருப்பதினால், எல்லாப் பொதுப்பணிகளுக்கும் ஒருவர் மிகவும் அதிகமாக சமூகத்தின் கூட்டுவாழ்க்கையை சார்ந்து இருக்க வேண்டியது கட்டாயமாகிறது. மற்றெப்போதைக் காட்டிலும், தற்சமயம், தனிநபர் ஒருவர் கூட்டு முயற்சியிலும், சமுதாயத்திலும் சேர்ந்திருப்பதை விட்டுவிட்டு ஒதுங்கி நிற்க முடியாது. தனியுடைமைக் கோட்பாடோ, கூட்டுத்தன்மைக்கு எதிராக இருக்கிறது. தனியுடைமைக் கோட்பாடு மறையும்போது கூட்டுவாழ்க்கையும் சோசலிசமும் நிச்சயமாக வெற்றிபெற்று செல்வாக்குப் பெறும்.

### வர்க்க சமுதாயமும் வர்க்கச் சார்பும்

உற்பத்தி முறையும், உற்பத்தி சக்தியும் முடிவின்றி தொடர்ந்து வளர்ச்சியுற்று மாறும். அவ்வாறு மாறுவதால், மனித சிந்தனையும், சமுதாய முறைகளும், மற்றவைகளும் கட்டாயமாக மாறுகிறது.

நாம் எல்லோரும் கடந்த காலத்திலிருந்து நிகழ் காலத்தை அறிகிறோம். உற்பத்திக் கருவிகள் மரக்கிளைகள், கற்கோடரிகளிலிருந்து, இயந்திரங்கள், மின்விசை, அணுசக்தி வரை படிப்படியாக வளர்ச்சி பெற்றுள்ளது. சமுதாய முறைகளும்கூட ஆரம்பகாலப் பொதுவுடைமைச் சமுதாயத்திலிருந்து, அடிமைச் சமுதாயம், நிலப் பிரபுத்துவச் சமுதாயம், முதலாளித்துவச் சமுதாயம் என்று வளர்ச்சிபெற்று மாறியுள்ளது.

புராதன பொதுவுடைமை மாறி தனி உடைமை உருவானதிலிருந்து சமுதாயம் வர்க்க அடிப்படையில் சுரண்டும் வர்க்கங்கள், சுரண்டப்படும் வர்க்கங்கள் என்று இரண்டாகப் பிரிந்துவிட்டது. இதனால் சமுதாய முரண்பாடுகளும், வர்க்கப் போராட்டங்களும் தோன்றலாயின. எந்த ஒரு மனிதனும் கட்டாயமாக இதில் ஏதாவது ஒரு வர்க்கத்தைச் சார்ந்தவனாக இருக்கவேண்டும். யாரும் தன்னுடைய வர்க்க சித்தாந்தத்திலிருந்து வெளியே ஒதுங்கி நிற்க முடியாது.

## வர்க்கப் போராட்டமும் புரட்சிகர கட்சியும்

சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட சமூகங்களில் நிலப்பிரபுக்கள், முதலாளிகள், ஏகாதிபத்தியவாதிகள் எல்லோரும் தொழிலாளிகள், விவசாயிகளான இதர சமூகப் பிரிவினரை ஈவு இரக்கமின்றி அடக்கி, ஒடுக்கிச் சுரண்டுகிறார்கள். சமூகம் முழுமையிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொதுச் சொத்தைக் கொள்ளையிடுகின்றனர். அதைத் தங்களுடைய உடைமையாக்கிச் சொகுசான இன்ப வாழ்வு வாழ்கின்றனர்.

இந்தச் சுரண்டலும், ஒடுக்குமுறையும் எப்பொழுதும் உறுதிப்படுத்தப்பட்டு நீடிப்பதை எதிர்த்துத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் இதர உழைக்கும் மக்கள் தங்களைத் தாங்களே விடுதலை செய்யப் போராடுகிறார்கள். இந்தப் பிற்போக்கான பழி பாவத்திற்கு அஞ்சாத அவக்கேடான சமூகத்தை மாற்றி எல்லாக் கஷ்டப்படும் மக்களும் மகிழ்ச்சியாக வாழவும், மனிதனை மனிதன் சுரண்டும் வழக்கத்தை ஒழிக்கவும், ஒரு புதிய மேலான சமுதாயத்தை அமைக்கவும் வீரதீரத்துடன் கிளர்ச்சிகள் செய்கின்றனர். புரட்சி நடத்துகின்றனர்.

இதில் வெற்றிபெற, மிகவும் முன்னேறியதும், வர்க்க உணர்வுடன் கூடியதும், உறுதியான, தீர்மானமான ஒழுங்குமுறையுடன் மிகவும் மேலான அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்டதுமான தொழிலாளி வர்க்கம்தான் தலைமை தாங்கி அந்தப் புரட்சியை நடத்த வேண்டும். அதை வழிநடத்திச் செல்லும் தலைமையான, உழைக்கும் மக்களின் புரட்சிகரமான கட்சி வேண்டும். ரசியா, சீனா உட்பட பல நாடுகளில் நடைபெற்ற புரட்சிகள் இந்த உண்மையை விவாதத்திற்கு இடமின்றித் தெளிவுபடுத்தியுள்ளது.

## உறுதியான அடித்தளம்

பழைய பிற்போக்கான சமுதாயத்திலிருந்து ஒரு புதிய முன்னேறிய சமுதாய அமைப்பை உருவாக்க ஒரு புரட்சியை நடத்துவது என்பது மிகவும் புகழ்மிக்க ஒன்றாகும். ஆனால், அது மிகவும் கடினமானதும், சிக்கலானதுமான நீண்ட நெடிய போராட்டமாகும்.

ஒரு பலம் மிக்க மனிதன்தான் தன்னுடைய முதுகில் பெரும் சுமையைத் தூக்கிக்கொண்டு நெடுந்தூரம் பயணம் செய்ய முடியும். ஒரு புரட்சியாளன் தன்னுடைய புகழ்மிக்க புரட்சிகரமான கடமையை நிறைவேற்ற புரட்சிகர ஒழுக்கநெறி, பண்பாட்டினாலான உறுதியான அடித்தளம் அமையப் பெற்றிருக்க வேண்டும்.

பழைமையானதும், பிற்போக்கானதுமான ஒரு சுரண்டும் சமூக அமைப்பில் மிகவும் படுமோசமான அபாயகரமான கழிசடைக் குணம் தனிநபர் வாதமாகும். தனிநபர் கோட்பாடு, புரட்சிகரமான ஒழுக்கநெறி மற்றும் பண்பாட்டிற்கு நேர் எதிரானதாகும்.

## பழைய சமூகத்தின் மிச்ச சொச்சங்களைக் களைந்தெறியக் கற்போம்

தனிநபர் வாதமென்னும் குணத்தின் மிகக் குறைந்த அளவிலான மிச்ச சொச்சமும்,

முதலில் வளரும். பின் புரட்சிகரமான புனிதத் தன்மையைத் தூசியடையச் செய்து மறைக்கும். இறுதியில் புரட்சியின் வெற்றிக்காக முழுமூச்சுடன் போராடுவதிலிருந்து நம்மைத் தடுத்து நிறுத்தும்.

மிகவும் ஏமாற்றுத் தன்மையுடையதும், நம்பிக்கைத் துரோகமுமான ஒன்றையொட்டியது தனிநபர் கோட்பாடு. அது ஒருவரை வஞ்சகமாகப் பின்னுக்குச் செல்லத் தூண்டும். முன்னோக்கிச் செல்வதைக் காட்டிலும் பின்னால் நிற்பது லகுவான காரியம் என்பது ஒவ்வொருவருக்கும் நன்றாக விளங்கும். ஆகவே அது மிகவும் அபாயகரமானதாகும்.

புரட்சிகரப் புனிதத் தன்மையை வளர்க்கவும், பழைய, பிற்போக்கான சமூக அமைப்பின் மிகமிக மோசமான குணாம்சங்களின் மிச்சசொச்சங்களைக் களைந்தெறியவும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். தொடர்ந்து முன்னேற, நாம் சுயமாகக் கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும். பிறரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். நம்மை நாமே திருத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாவிடில், நாம் பின்தங்கி விடுவோம். பின்னுக்குத் தள்ளப்படுவோம்.

கட்சிப் பள்ளிக்குச் சென்றும், பயிற்சிப் பாடத் திட்டங்களில் பங்குகொண்டும்தான் படிக்கவேண்டும் என்பதில்லை. ஒவ்வொரு புரட்சிகரமான நடவடிக்கையிலும் பங்குகொள்வதினால் அதைச் செய்ய முடியும். செய்ய வேண்டும்.

பொதுவான புரட்சி இயக்கக் கிளர்ச்சிகள், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள், எல்லாவிதமான ஒடுக்குமுறைகளுக்கும் அடிமைத்தனங்களுக்கும் எதிரான நடவடிக்கைகள், தேச விடுதலைக்கான போராட்டங்கள் எல்லாம் ஒருவர் பயிற்சிபெற வேண்டிய மிகவும் நல்ல பள்ளிகள். அவற்றிலிருந்து நாம் புரட்சிகரப் பண்புகளை அடைய வேண்டும்.

## துன்பத்தை எதிர்கொள்ளும் துனிவு வேண்டும்

புரட்சிகரமான பண்புகொண்ட மக்கள் துன்ப துயரங்களையும், கஷ்டங்களையும் கண்டு அஞ்சமாட்டார்கள். தோல்விகண்டும் துவளமாட்டார்கள். அவர்கள் ஊசலாடவும் மாட்டார்கள். பின்னோக்கிச் செல்லவும் மாட்டார்கள். தேசம், வர்க்கம், புரட்சி, மற்றும் புரட்சிகரமான கட்சி இவற்றின் மேம்பாட்டிற்காகத் தங்கள் சொந்த நலனைத் தியாகம் செய்ய எப்பொழுதும் தயங்கியதில்லை. இது, புரட்சிகரமான ஒழுக்கநெறி, பண்பாட்டின் மிகத் தெளிவான, மிக உயர்ந்த விளக்கமாகும்.

உலகம் முழுவதிலும் மனித குலத்தின் விடுதலைக்காகவும், உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்காகவும் பல தோழர்கள் தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்துள்ளனர். முழுமையாகத் தன்னலமற்ற தன்மையும், மக்களின் நலனுக்காகத் தங்கள் வாழ்க்கையையும் அர்ப்பணம் செய்யும் பிரகாசமான உதாரணங்களை இதன் மூலம் ஏற்படுத்தியுள்ளனர்.

சாதகமான சூழ்நிலைகள் இருந்த நிலையிலும், வெற்றிகள் அடைந்தபோதும்கூட புரட்சிகரப் பண்பாளர்கள் எளிமையாகவும், தன்னடக்கம் உடையவராகவும், எப்பொழுதும் மிகவும் கடுமையான துன்ப துயரங்களை எதிர்நோக்குபவராகவும் இருந்து வருவர். மற்றவர்களைக் காட்டிலும் கடமையைப் பற்றி அளவுகடந்த அக்கறை கொள்வர். அதன்பின்தான் மகிழ்ச்சிபற்றி சிந்திப்பர். நமது கடமையை எவ்வாறு நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டுமென்று நாம் சிந்தனை செய்ய வேண்டுமேயன்றி, மிகப் பெரிய பரிசை எவ்வாறு அடைவது என்பது பற்றியல்ல.

ஒழுக்கக்கேடு, இறுமாப்பு, அதிகாரவர்க்கப் போக்கு ஆகியவைகளில் மனம்போன போக்கில் ஈடுபடுவதும், விசேச முதல் மரியாதைக்கு உரிமை கொண்டாடுவதும்,

கடந்தகால சாதனைகளைப்பற்றி மிகைப்படுத்திக் கொள்வதையும் நாம் தவிர்த்தாக வேண்டும்.

## முன்னுதாரணமாகத் திகழ்வோம்

புரட்சிக்காகவும், புரட்சிகரமான கட்சிக்காகவும் போராடுவதில் ஒருவருடைய உயிரைத் தியாகம் செய்வது மிகவும் தேவையான ஒன்றாகும். கட்சிக்காக கடினமாக உழைப்பது, கட்சிக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து ஒழுகுவது மற்றும் கட்சிக் கொள்கைகளையும் வழிமுறைகளையும் அமுல் செய்வதும் மிகவும் தேவையானதாகும்.

தனிநபருடைய நலன்களுக்கு மேலாகக் கட்சி மற்றும் உழைக்கும் மக்களின் நலன்களை முன்னிறுத்தி முதன்மைப் படுத்துதல், மக்களுக்கு முழுமனதுடன் சேவை செய்வது, மக்களுக்காகவும் கட்சிக்காகவும் தன்னலமின்றிப் போராடுதல் என ஒவ்வொரு அம்சத்திலும் முன்னுதாரணமாகத் திகழ்தல் வேண்டும். மார்க்சியம் மற்றும் லெனினியத்தை கற்றுக்கொள்ளப் பெருமுயற்சி செய்வது, ஒருவருடைய சித்தாந்த அறிவுத் தரத்தை உயர்த்த இடைவிடாது சுயவிமர்சனம், விமர்சனம் செய்வது, மற்ற தோழர்களுடன் சேர்ந்து ஒருவருடைய வேலையையும் முன்னேற்றத்தையும் வளர்ச்சியுறச் செய்வதும் வேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சி என்பது ஒரு தொழிலாளி வர்க்க ஸ்தாபனம். தொழிலாளி வர்க்கத்தின் எதிர்காலம் பெரிதாகவும் கீர்த்திமிக்கதாகவும் இருக்கிறது. அது தன்னையும் மாற்றிக்கொண்டு உலகத்தையும் மாற்றும். ஒவ்வொரு புரட்சியாளனும் இதை மிகத் தெளிவாக உணர வேண்டும். எல்லா உழைக்கும் மக்களுக்காகவும், தொழிலாளி வர்க்கத்திற்காகவும், சோசலிச நிர்மானத்திற்காகவும் முழுமனதுடன் போராடுவதற்கேற்ற வகையில் அவன் தொழிலாளிவர்க்க நிலையில் உறுதியாக இருக்கவேண்டும்.

புரட்சிகர ஒழுக்கநெறி புரட்சிக்கும், புரட்சிகர கட்சிக்கும் மக்களுக்கும் முழுமையான விசுவாசத்துடன் இருப்பதில்தான் அடங்கியுள்ளது. கட்சியின் குறிக்கோளை அடைவதற்கு கடும் முயற்சி செய்வதிலும் உழைக்கும் மக்களுக்கும், தொழிலாளி வர்க்கத்திற்கும் நம்பிக்கையுடன் சேவை செய்வதிலும், எப்பொழுதும் ஊசலாட்டமின்றி இருப்பதிலும் புரட்சிகரப் பண்பாடு என்பது அடங்கியுள்ளது.

## போராட்டத்தில் உறுதி

இயக்கத்தில் பலர் தங்களிடையே தனிநபர்வாதம் வளர்ச்சியடைய விடுகிறார்கள். ஓய்வும், சுகபோகமும் கோருகிறார்கள். அவர்களது ஸ்தாபனங்களால் நிச்சயிக்கப்பட்டு ஒப்புவிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்குப் பதில் அவர்களே லேசான வேலைகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள். அவர்கள் கட்சியில் உயர்பதவியை விரும்புகிறார்கள். ஆனால், பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கிறார்கள். அவர்களின் போர்க்குணமிக்க தன்மையும் சக்தியும் படிப்படியாக வலுவிழக்கிறது. அவ்வாறே அவர்களின் புரட்சிகரமான உறுதியும் உயர்ந்த நற்பண்புகளும் வலுவிழக்கின்றன. புரட்சிக்காகவும், புரட்சிகரமான கட்சிக்காகவும் தன் வாழ்நாள் முழுவதும் போராட வேண்டுமென்ற உறுதியான பற்றுதான் ஒரு புரட்சியாளரின் அடிப்படைத் தத்துவம் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்.

## மூன்று எதிரிகள்

ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் அபாயகரமான எதிரிகள் ஆகும். மூடப்

பழக்கங்களும் பாரம்பரியமும் மிகப் பெரிய எதிரிகள்தான். ஏனென்றால், அவை கபடத்தனமாக, நயவஞ்சகமாகப் புரட்சியின் முன்னேற்றத்தைத் தடுக்கின்றன. இருந்தபோதிலும், அவைகளை உடனே அகற்றிவிட முடியாது. மிகுந்த முன்னெச்சரிக்கையுடனும், பொறுமையுடனும் நீண்ட போராட்டத்தில் அவைகளை அகற்ற முயற்சிக்க வேண்டும்.

மூன்றாவது எதிரி தனிநபர்வாதமாகும். அது இன்னும் நம் ஒவ்வொருவரிடமும் ஒளிந்து ஒட்டிக்கொண்டு இருக்கிற குட்டி முதலாளித்துவ மனப்பான்மையேயாகும். அது தன்னுடைய தலையை வெளியே நீட்ட வெற்றி, தோல்வி போன்ற ஒரு சந்தர்ப்பத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் இந்த எல்லா எதிரிகளையும் எதிர்த்து உறுதியாகப் போராடுவதிலும், ஒருவருடைய உஷார் தன்மையைப் பாதுகாப்பதிலும், தலைகுனியாமல், நிமிர்ந்த பார்வையுடன் அக்கிரமத்திற்கு அடிபணியாமல் எப்பொழுதும் போரிடத் தயாராக நிற்கும் நிலையிலும் புரட்சிகரப் பண்பாடுகள் அடங்கியுள்ளன. அவ்வாறு செய்வதன் மூலம்தான் நாம் எதிரிகளைத் தோற்கடித்து நமது புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்ற முடியும்.

## ஒழுங்கும் கட்டுப்பாடும்

சரியான கொள்கைத் தெளிவும், ஒன்றுபட்ட தலைமையும் இருந்தால்தான் கட்சி, மக்கள் எல்லோரையும் தொழிலாளி வர்க்கத்தையும் சோசலிசத்தை நோக்கி அழைத்துச் செல்ல முடியும். அதனுடைய எல்லா உறுப்பினர்களுடைய சிந்தனை, செயல் இரண்டிலும் ஒற்றுமை ஏற்படுவதன் மூலமாகத்தான் ஒன்றுபட்ட தலைமை உருவாகும். இந்த ஒற்றுமை இல்லாவிட்டால் கட்சி ஒரு பஜனைக் கோஷ்டி போலத் தோற்றமளிக்கும். மக்களுக்குத் தலைமை தாங்கிப் புரட்சியை வெற்றிகரமாக நடத்திமுடிக்க இயலாமல் போய்விடும்.

இயக்கத்தில் சேர்ந்திருக்கிற பலர் புரட்சி வேலையில் தங்களுக்குரிய பங்கை முழுமையாகச் செலுத்துவதில்லை. அவர்கள் தங்கள் விருப்பம்போல் செயல்படவும் கட்சி ஸ்தாபனம் மற்றும் ஒழுங்கு கட்டுப்பாடு விதிகளுக்கு முரணாகச் செல்லத் தூண்டுவதும் தனிநபர்வாதம்தான். செருக்கும், ஆணவப் போக்கும்தான். தெரிந்தோ தெரியாமலோ அவர்கள் செய்யும் செயல்கள் கட்சியின் பெருமையை சேதப்படுத்துகிறது. கட்சியின் வேலைக்கு இடையூறாக இருந்து புரட்சியின் முன்னேற்றத்தைத் தடைசெய்கிறது.

ஒரு புரட்சிகர கட்சி உறுப்பினருக்கு என்ன துன்ப துயரங்கள் நேரிட்டாலும் மக்களின் நலன்களுக்கு உழைப்பதற்கான குறிக்கோள்களை உறுதியாக நிறைவேற்றுவதில்தான் புரட்சிகர ஒழுக்க நெறி அடங்கியுள்ளது. இதன் மூலம்தான் மக்களுக்கு ஒரு முன்மாதிரி உதாரணத்தை ஏற்படுத்த முடியும். ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் புரட்சிக்கும், புரட்சிகர கட்சிக்கும், மக்களுக்கும் உள்ள தன்னுடைய கடமை உணர்வை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

தனிநபர் அல்லது ஏதாவது ஒரு கோஷ்டியின் நலனில் நமக்கு அக்கறை இல்லை. உழைக்கும் மக்களின், தொழிலாளி வர்க்கம் முழுமையின் பொது நலனைத்தான் நாம் முன்நிறுத்துகிறோம். தொழிலாளி வர்க்கம் தன்னை மட்டும் விடுவிக்கப் போராடவில்லை. மனித சமுதாயம் முழுவதையும் சுரண்டல், ஒடுக்குமுறைகளில் இருந்து விடுவிக்கப் போராடுகிறது.

புரட்சிகரமான கட்சியில் இருந்தும் தனது வர்க்கத்தில் இருந்தும் தன்னைப் பிரித்துக்கொண்டு எந்தத் தனிநபரும் எவ்வளவு திறமையாளனாக இருந்தாலும்

எதுவும் அடைந்துவிட முடியாது. கட்சி உறுப்பினர்களுக்குப் புரட்சிகர ஒழுக்கநெறி என்பது எல்லா சூழ்நிலைகளிலும் எல்லாவற்றிற்கும் மேலாக கட்சியின் நலனை நிலைநிறுத்துவதில் அடங்கும். தனிநபரின் நலன் கட்சியின் நலனுக்கு முரண்பட்டிருந்தால் தனிநபரின் நலன் கட்சியின் நலனுக்காக முழுமையாக விட்டுக் கொடுக்கப்பட வேண்டும்.

## எதையும் எதிர்பார்க்காத அர்ப்பணிப்பு

தனிநபர்வாதத்தில் இருந்து தங்களைத் தாங்களே தூய்மைப்படுத்திக் கொள்ளாமல் பல கட்சி உறுப்பினர்கள் கட்சிக்குத் தாங்கள் செய்த சேவையைத் தொடர்ந்து பீற்றிக் கொள்கிறார்கள். அதற்காக அவர்கள் கட்சியிடம் நன்றிக் கடனை எதிர்பார்க்கிறார்கள். உயர்பதவிகள், தனிச் சலுகைகள் போன்றவற்றை விரும்புகிறார்கள். அவர்கள் விருப்பம் நிறைவேறாவிட்டால் கட்சிக்கு எதிராகக் கோபம் கொண்டு வன்மம் கொள்கிறார்கள். தங்களுக்கு எதிர்காலம் இல்லை எனவும் தாங்கள் பலியிடப்பட்டிருக்கிறோம் எனவும் அவர்கள் புகார் கூறுகிறார்கள். படிப்படியாக கட்சியிலிருந்து ஒதுங்குகிறார்கள். கட்சியின் கொள்கைகளையும், கட்டுப்பாடு நியதிகளையும் அழிக்கிறார்கள்.

பல ஊழியர்கள் புரட்சிப் போராட்டங்களில் வீரமாகப் போர்புரிந்து தங்கள் இன்னுயிரை ஈந்தனர். அந்தத் தோழர்கள் பதவியோ, அந்தஸ்தோ ஒருபோதும் விரும்பியது இல்லை. கட்சியிடமிருந்து ஒருபோதும் நன்றியைக் கோரவில்லை.

சமுதாயத்தின் தற்போதைய நிலையின் காரணமாக கட்சி உறுப்பினர்களின் பெரும்பகுதி குட்டி முதலாளி வர்க்கத்திலிருந்து வருகின்றனர். இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆரம்ப காலத்தில் இவர்கள் உறுதித் தன்மையற்று இருக்கின்றனர். இவர்களின் பார்வை குழப்பமாகவும் சிந்தனைகள் முற்றிலும் சரியாக இல்லாமலும் இருக்கின்றன. புரட்சிப் போராட்டங்களில் புடம்போட்டு எடுக்கப்படும் போதுதான் பலர் நல்ல புரட்சியாளர்களாகவும், புரட்சிக்கும், புரட்சிகர கட்சிக்கும் விசுவாசம் உள்ளவர்களாகவும் மாறுகின்றனர்.

## விமர்சனம், சுயவிமர்சனம்

தவறு செய்யும் கட்சி உறுப்பினர்கள் மக்களை தவறான வழிகாட்டி அழைத்துச் செல்கின்றனர். எனவே, அவர்கள் ஏதாவது தவறு செய்தால் அதை உடனே திருத்திக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். சிறிய சிறிய தவறுகளாகச் சேர்ந்து ஒன்று குவிந்து பெரிய தவறுகள் உண்டாக அனுமதிக்கக் கூடாது. இதன்பொருட்டு, அவர்கள் உண்மையிலேயே சுயவிமர்சனம், விமர்சனம் ஆகியவற்றைக் கையாள வேண்டும். கூர்மையான ஆயுதங்களாகிய சுயவிமர்சனம், விமர்சனத்தைப் பயனுள்ள முறையில் பயன்படுத்த வேண்டும்.

இருந்தாலும் பல உறுப்பினர்கள் தனிநபர்வாதத்தை ஒதுக்கிவிட முடியாத நிலையில் தொடர்ந்து இருக்கின்றனர். தற்பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களை விமர்சனம் செய்கிறார்கள். தாங்கள் மட்டும் மற்றவர்களால் விமர்சனம் செய்யப்படுவதை விரும்பாமல் இருக்கிறார்கள். சுயவிமர்சனத்தைத் தவிர்க்கிறார்கள். முக்கியமற்ற நிலையிலும் உண்மைக்குப் புறம்பாகவும் அதை உபயோகிக்கிறார்கள். சுயவிமர்சனத்தால் தங்கள் பெருமையும் மதிப்பும் போய்விடுமோ என்று பயப்படுகிறார்கள்.

ஊழியர் ஒருவரின் வேலையில் குறைபாடுகளே இல்லாமல் இருப்பது மிகவும் கடினம். தவறுகள், குறைகள் ஏற்படுவதைக் குறித்து நாம் பயப்படத் தேவையில்லை. ஆனால், தவறுகளைத் திருத்துவதில் தவறுவதைப் பற்றியே நாம் பயப்பட

வேண்டியவர்களாய் இருக்கிறோம். சுயவிமர்சனத்திற்கு நாம் பழகிக் கொள்ளாவிட்டால் பின்தங்கிப் பின்னோக்கி செல்வோம். அது நம்மை மக்களால் ஒதுக்கித் தள்ளப்படும் நிலைக்கு இட்டுச் செல்லும். இதுதான் தனிநபர்வாதத்தின் தவிர்க்க முடியாத பின்விளைவாகும்.

## மக்களிடம் கற்போம்

புரட்சிகரப் பண்பாடு என்பது மக்களின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து அதில் கவனம் செலுத்தும் வகையில் அவர்களிடம் நம்பிக்கை வைப்பது, ஒரே அமைப்பில் அவர்களை ஒன்றிணைப்பது ஆகியவைகளில் அடங்கியுள்ளது. கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் தங்கள் சொல்லாலும் செயலாலும் மக்களின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் அன்பையும் பெறவேண்டும். மக்களைப் புரட்சிகரமான கட்சிக்கு நெருக்கமாக ஒற்றுமைப் படுத்துதல், அமைப்பு ரீதியாகத் திரட்டுதல், அரசியல் கல்வி புகட்டல் ஆகியவற்றின் மூலமாக கட்சியின் கொள்கைகளையும் தீர்மானங்களையும் உற்சாகமாக அமுல்நடத்த வழிகாண வேண்டும்.

ஆனால், இன்று தனிநபர்வாதம் நமது தோழர்களில் பெரும்பாலோரை ஆட்கொண்டு இருக்கிறது. ஒவ்வொன்றிலும் கெட்டிக்காரத்தனமாக இருக்கிறோம் என்று கூறிக்கொண்டு மக்களிடமிருந்து விலகிச் செல்கின்றனர். அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள மறுத்து கற்றுக்கொடுக்க மட்டுமே விரும்புகின்றனர். மக்களிடையே வேலை செய்யவும், அமைப்பு, பிரச்சாரம், கட்சிக்கல்வி இவற்றில் முழுமையாக ஈடுபட விரும்பாமல் தயங்குகின்றனர். அவர்கள் அதிகார வர்க்கப் போக்காலும், கட்டளையிடும் போக்காலும் பீடிக்கப்பட்டுள்ளனர். இதன் விளைவாக மக்கள் இவர்களை நம்புவதும் இல்லை, மதிப்பதும் இல்லை. சந்தர்ப்பவசத்தால்கூட இவர்கள் நன்மையான காரியங்கள் எதுவும் செய்வதில்லை.

## கூட்டு நலனுக்குள் தனிநபரின் நலன்கள்

சோசலிசத்திற்கான போராட்டத்தை தனிநபர்வாதத்தை களைந்தெறியும் போராட்டத்திலிருந்து தனியாகப் பிரிக்க முடியாது. தனிநபர்வாதத்தை எதிர்த்துப் போராடுவது என்பது தனிநபரின் நலன்களைக் காலில் போட்டு மிதிப்பது அல்ல. ஒவ்வொரு மனிதனுக்கும் சொந்த குணபாவங்கள், தனித் திறமை, சொந்த வாழ்க்கை மற்றும் குடும்பம் உண்டு. தனிநபர் ஒருவரின் நலன்கள் கூட்டு வாழ்க்கையின் நலன்களுக்கு நேர் எதிராகப் போகாதபோது அதனால் தீங்கு இல்லை. தனிநபரின் நலன்கள் கூட்டு நலன்களுக்கு முரண்பட்டு இருந்தால் முன்னது பின்னதற்கு விட்டுக் கொடுக்க வேண்டுமெனப் புரட்சிகரக் கோட்பாடு கோருகிறது. ஏனென்றால், கூட்டு நலனுக்குள் தனிநபரின் நலன்கள் அடங்கிவிடுகிறது. அதனுடைய பகுதியாகவும் ஆகிவிடுகிறது. கூட்டுநலன் பாதுகாக்கப் பட்டால் தனிநபரின் நலன் பூர்த்தியடைகிறது.

## மார்க்சிச லெனினிசக் கல்வி

புரட்சி இடைவிடாமல் தொடர்ந்து முன்னேறுகிறது. அவ்வாறே புரட்சிகர கட்சியும் முன்னேறுகிறது. அதேபோல் புரட்சியாளனும் முன்னேற வேண்டும். புரட்சிகரமான இயக்கம் லட்சோப லட்சம் மக்களை இணைத்துக் கொண்டிருக்கிறது. புரட்சியை நடத்துவது என்பது ஆயிரம் ஆயிரம் சிக்கலான கடினமான கடமைகள் நிறைந்தது. சிக்கலான எல்லா நிலைமைகளையும் தெளிவாக நிர்ணயம் செய்யவும், முரண்பாடுகளைப் புரிந்துகொள்ளவும், எல்லா பிரச்சினைகளுக்கும் சரியான தீர்வு காணவும் மார்க்சிச லெனினிசத்தைக் கற்றுக்கொள்ள நாம் முயல வேண்டும்.

மார்க்சிச லெனினிசத்தைக் கற்பதின் மூலம்தான் புரட்சிகர ஒழுக்கநெறியை நாம்

ஒருங்கிணைக்க முடியும். நமது நிலையை உறுதியாகப் பாதுகாக்க முடியும். சித்தாந்த அரசியல் தரத்தை உயர்த்த முடியும். கட்சியால் நம்மிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள கடமைகளை நிறைவேற்ற முடியும்.

ஒருவர் பிரச்சினைகளை எவ்வாறு அணுகுகிறார் என்பதைப் பொறுத்தும், எந்த முறையில் அணுகுகிறார் என்ற அனுபவங்களைக் கற்றுக் கொள்வதன் மூலமும் மார்க்சிய லெனினியத்தைப் புரிந்துகொள்ள முடியும். ஒரு நாட்டின் தனிப்பட்ட நிலைமைகளுக்கேற்ப படைப்பாற்றலுடன் அதைப் பயன்படுத்துவதற்கு உலக முழுமைக்குமான மார்க்சிய லெனினிய உண்மைகளைக் கற்க வேண்டும். செயலில் அதாவது நடைமுறையில் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் நாம் கற்க வேண்டும். தத்துவமும் நடைமுறையும் ஒன்றோடொன்று இணைந்து இரண்டும் கைகோர்த்துச் செல்ல வேண்டும்.

ஆனால், பல தோழர்கள் மார்க்சிய லெனினியம் பற்றிய புத்தகங்கள் சிலவற்றை மனப்பாடம் செய்துகொள்கிறார்கள். மற்றவர்களைக் காட்டிலும் அவர்கள்தான் மார்க்சிய லெனினியத்தைப் புரிந்து கொண்டவர்கள் என நினைக்கிறார்கள். நடைமுறையில் பிரச்சினைகளை நேரில் சந்திக்கும்போது எந்திரகதியில் செயல்படுகிறார்கள், அல்லது குழப்பத்தில் தள்ளப்படுகிறார்கள். அவர்களுடைய செயல்கள் சொல்லுக்குப் பொருத்தமாக இருப்பதில்லை. மார்க்சிய லெனினிய புத்தகங்களைப் படிக்கிறார்கள். ஆனால், அதன் சாரத்தைப் புரிந்து கொள்வதில்லை. தங்களின் படிப்பாளித் தனத்தை வெளிச்சம் போடுகிறார்களேயன்றி நடைமுறையில், புரட்சி நடவடிக்கைகளில் அவைகளை அவர்கள் பயன்படுத்துவதில்லை. இதுவும்கூட தனிநபர்வாதம்தான்.

## தியாகமே அடிப்படை

தனிநபர்வாதம் நூற்றுக்கணக்கான பயங்கர நோய்களைப் பரவச் செய்கிறது. அதிகார வர்க்க மனப்பான்மை, கட்டளையிடும் போக்கு, வறட்டுத்தனம், தன்னோக்கு நிலை, லஞ்ச லாவண்யம், வீன் விரயம் போன்றவற்றிற்குப் பலியானவர்கள் கை கால்கள் கட்டுண்டு முடமாக்கப்பட்டு கண்மூடித்தனமாகத் தன்னுடைய அந்தஸ்து மற்றும் பெருமையை உயர்த்திக் கொள்ளும் விருப்பத்தால் வழி நடத்தப்பட்டு மக்களுடையவும், வர்க்கத்தினுடையவும் நலன்களைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் செயல்படுவர். தனிநபர்வாதம் சோசலிசத்தின் கொடிய எதிரி. புரட்சியாளர்கள் இதைக் களைந்தெறிய வேண்டும்.

புரட்சிக்காகவும், புரட்சிகர கட்சிக்காகவும் போராடுவதில் ஒவ்வொரு புரட்சியாளரும் தன்னுடைய உயிரையும், உடைமைகளையும் தியாகம் செய்வது மிகவும் அவசியமானதாகும். இதுவே புரட்சியாளர்களின் நற்பண்பு. இதுவே புரட்சிகரப் பண்பாடு.

புரட்சிகரப் பண்பாடு என்பது திடீரென்று வானத்தில் இருந்து கீழே விழுந்துவிடாது. தினந்தோறும் கடும் முயற்சியில் போராட்டத்தில் கடைப்பிடிப்பதன் மூலம் அது வளர்ச்சியுற்று ஒருங்கிணைக்கப் படுகிறது. பூமியிலிருந்து எடுக்கும் உலோகத்தைப் போல உருக்க உருக்க அது மின்னுகிறது. புடம் போடப் போடத் தங்கம் மாத்து வருவது போல, தியாகத்தின் மூலமாகப் புரட்சிகரப் பண்பாடு வளருகிறது.

மனித சமுதாயத்தை விடுவிப்பதற்கும் சோசலிசத்தை நிர்மாணிப்பதற்குமான உயர்ந்த பங்கை ஆற்றுவதற்கு ஏற்ற முறையில் புரட்சிகர ஒழுக்க நெறியை வளர்ப்பதைக் காட்டிலும் சிறந்த பெருமையும் மகிழ்ச்சியும் வேறு என்ன இருக்க முடியும்?

■



## ஹோ சி மின்

நகுயென் சின் சுங் என்றும் நகுயென் தட் தன் என்றும் நகுயென் அய் குவோக் என்றும் அழைக்கப்பட்ட ஹோ சி மின் வியட்நாமியத் தொழிலாளர் கட்சியின் அமைப்பாளரும் தலைவரும் முதலாவது செயலரும் ஆவார். 1890ல் பிறந்தவராகக் கருதப்படும் இவரது உண்மையான பிறந்த தேதி அறியப்படவில்லை என்றும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசு அமைந்த மே 19 ஆம் தேதியே இவரது பிறந்த தினமாக கடைப்பிடிக்கப் படுகிறது என்றும், அதுபோல ஹோ சி மின் என்பது இவருக்கு இருந்த ஏராளமான புனைப்பெயர்களில் ஒன்று என்றும் கூறப்படுகிறது. தோழர் லெனின் அவர்களால் வழிநடத்தப்பட்டு இயங்கிய மூன்றாவது அகிலத்தில் 1919 க்கும் 1921 வரையான காலத்தில் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின்  பிரதிநிதியாக கலந்து கொண்டார். மூன்றாம் அகிலத்தின் முடிவுக்கு ஏற்ப சீனாவுக்கு அனுப்பப்பட்ட முதலாவது போல்ஷ்விக் குழுவிலும் இவர் இடம்பெற்றிருந்தார். ***வியட்மின்*** விடுதலை இயக்கத்தை 1941 ஆம் ஆண்டு முதல் தொடங்கி நடத்தினார். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தலைமறைவு வாழ்க்கை நடத்தியவர். 1945 ஆம் ஆண்டில் '***ஆகஸ்டுப் புரட்சி***'க்குப் பிறகு,  வடக்கு வியட்நாமிய ஜனநாயகக் குடியரசின் பிரதமராக 1955 ஆம் ஆண்டுவரையும் பின்னர் அதன் அதிபராக 1969 ஆம் ஆண்டு வரையும் பணியாற்றினார். செப்டம்பர் 2, 1969ல் அவர் மரனமடைந்தார். உடல்நலக் குறைவின் காரணமாக 1965 ஆம் ஆண்டே பதவியை விட்டு விலகினாலும் அவரது மரணம் வரை அவரே வியட்நாமின் மிகவும் உயர்வான மரியாதைக்குரிய ஆளுமையாகத் திகழ்ந்தார். பிரெஞ்சு மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியங்களை எதிர்த்து,  தென்வியட்நாமை விடுதலை செய்யவும் ஒன்றுபட்ட வியட்நாமை உருவாக்குவதற்குமான யுத்தத்தின் முடிவில் தென்வியட்நாமின் பழைய தலைநகரான சைகோன் நகருக்கு ***ஹோ சி மின் சிட்டி*** என்று 1976 ஜூலை 2ம் தேதி முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. புகழ்பெற்ற தனிநபர்வாதத்திற்கு எதிரான கட்டுரை அவர் மரணமடைவதற்கு ஏழு  மாதங்களுக்கு முன்பு அவரால் எழுதப்பட்டு 3, பிப்ரவரி, 1969 அன்று ***நான் தன்*** என்ற செய்தியேட்டில் பிரசுரமானது. ஆங்கிலத்தில் அது "“Raising revolutionary ethics, and sweeping away individualism” என்ற தலைப்புடன் பிரசுரமானது.

**ஜே. ஹேல்ஸ்:**

முதலாம் அகிலத்தின் பொதுக்குழு உறுப்பினர்களில் ஒருவர். இங்கிலாந்தின் நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதி.

□

**சிஸ்மொன்டி**
19-05-1773 – 25-06-1842

சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவைச் சேர்ந்த வரலாற்றறிஞரும் அரசியல் பொருளியல் அறிஞரும் ஆவார். பொருளியல் அறிஞர் ஆடம் ஸ்மித்தின் கொள்கைகள்பால் அதிக ஈடுபாடு கொண்டவர். பிரான்சு மற்றும் இத்தாலி நாட்டு வரலாறு குறித்த இவரது பதிவுகளுக்காகவும், பொருளாதாரச் சுழற்சி என்ற இவரது பொளாதாரக் கொள்கைக்காகவும் முக்கியமானவராகக் கருதப்படுகிறவர்.

□

**டாம் மான்**
15-04-1856 – 13-03-1941

இங்கிலாந்து நாட்டுத் தொழிலாளர் இயக்கத்தில் வெற்றிகரமான அமைப்பாளராகவும், சிறந்த பேச்சாளராகவும் விளங்கிய தொழிற்சங்கவாதி. பல தொழிற்சங்கங்களின் தலைவராக இருந்தவர்.

□

**பிராங்க்**

இந்தியப் பணத்தை ரூபாய் என்ற பெயரால் அழைப்பது போல யூரோ ஐரோப்பிய நாடுகளின் பொதுப் பணமாக நடைமுறைப்படுத்தப்படும் முன்பு பிரெஞ்சு நாட்டுப் பணம் இப்பெயரால் அழைக்கப்பட்டது.

□



## கார்ல் ஜோஹான் காவுத்ஸ்கி
(16-10-1854 – 17-10-1938)

செக்-ஆஸ்திரியப் பின்புலம் கொண்ட மார்க்சியவாதி, பத்திரிக்கையாளர். வியன்னா பல்கலைக் கழகத்தில் வரலாறு, பொருளாதாரம் மற்றும் தத்துவஞானம் கற்றவர். 1874 ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரிய சமூக-ஜனநாயகக் கட்சியில் உறுப்பினர். 1878 முதல் 1890 வரையான காலங்களில் ஜெர்மனியில் சோசலிசத் தடைச் சட்டம் நடைமுறையில் இருந்தபோது ரகசியமாக சோசலிச இலக்கியங்களை ஜெர்மனிக்குள் கடத்திய ஒரு குழுவில் செயல்பட்டார். 1881 முதல் மார்க்சியவாதியாகி இங்கிலாந்தில் மார்க்ஸ், எங்கெல்ஸைச் சந்தித்தார். 1883 ஆம் ஆண்டில் ஜெர்மனியின் ஸ்டுட்கார்ட் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு ***டை நியு ஜெட்*** என்ற மாத இதழைத் தொடங்கி நடத்தினார். அது 1890 ஆம் ஆண்டில் வார இதழாக மாறியது. 1917 வரை அந்த வார இதழின் ஆசிரியராக இருந்தார். 1885 ஆம் ஆண்டு முதல் 1890 வரையான காலங்களில் லண்டன் நகரில் எங்கெல்ஸின் நெருங்கிய நண்பராக இருந்தார். எங்கெல்ஸ் அவரை மார்க்ஸின் மூலதனம் நூலின் நான்காம் தொகுதியான "***உபரி மதிப்புக் கோட்பாடு***' என்ற நூலைத் தொகுத்துப் பதிப்பிக்கும் வேலையில் பயன்படுத்தினார். முதலாம் உலக யுத்தத்தில் தனது தாய்நாடான ஜெர்மனியை ஆதரித்தார். இதன் காரணமாக லெனினுடைய கடும் விமர்சனத்திற்கு ஆளானார். ரஷ்யாவின் போல்ஷ்விக் புரட்சியின் மீது கடுமையான விமர்சனங்கள் கொண்டிருந்தார். இவருடைய மனைவி லூயிஸ் காவுத்ஸ்கி பிரபல ஜெர்மன் மார்க்சியரான ரோசா லக்ஸம்பர்க்கின் நெருங்கிய தோழி ஆவார்.

## பிரடெரிக் ஸோர்கே

(09-11-1828 – 26-10-1906)



அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு குடிபெயர்ந்த ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த கம்யூனிஸ்ட். தமது 19வது வயதில் 1848 ஆம் ஆண்டில் ஜெர்மனியில் நடைபெற்ற புரட்சிப் போராட்டங்களில் பங்கேற்றவர். ஜெர்மனி நாட்டு அரசாங்கத்தால் மரணதன்டனை விதிக்கப்பட்டவர். புரட்சி தோல்வியுற்றபின் நாட்டை விட்டு வெளியேறி சுவிட்சர்லாந்தில் சில ஆண்டுகள் தங்கியிருந்தார். சுவிட்சர்லாந்து அரசாங்கம் அவரை நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டதால் பெல்ஜியம், இங்கிலாந்து நாடுகள் வழியாக அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று அங்கேயே குடியேறி வாழ்ந்தார். அமெரிக்காவில் மார்க்சின் கருத்துக்களைப் பரப்புவதில் முக்கியப் பங்காற்றினார். ***முதலாம் அகிலம்*** என்று அறியப்படும் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் முதலாவது பிரிவை 46 உறுப்பினர்களுடன் துவக்கினார். 1872 முதல் 1874 வரையான காலங்களில் முதலாம் அகிலத்தின் பொதுச் செயலாளராக இருந்தார். அமெரிக்காவில் ***சோசலிசத் தொழிலாளர் கட்சி***யைத் தொடங்கிய குழுவை வழிநடத்தினார். 1860 தொடக்கம் 1883ல் மார்க்ஸ் மரணம் அடையும் வரை அவருடன் தொடர்ச்சியான கடிதப் போக்குவரத்துகள் வைத்திருந்தார். 1888ல் பிரடெரிக் எங்கெல்ஸ் அமெரிக்காவில் இவருடைய வாழ்விடத்திற்கு சென்று இவரைச் சந்தித்தார். பிரபல சோவியத் உளவாளி ***ரிச்சர்டு ஸோர்கே*** இவருடைய உறவுமுறைத் தொடர்ச்சியில் வந்தவர் ஆவார்.

### முதலாம் அகிலம்

முதலாம் அகிலம் என்பது பல்வேறு இடதுசாரி அரசியல் குழுக்களையும், தொழிலாளர்களின் சங்கங்களையும் ஒன்றிணைக்க மார்க்ஸ் எங்கெல்ஸால் உருவாக்கப்பட்ட அமைப்பு. சர்வதேசத் தொழிலாளர் சங்கம் என்றும் அழைக்கப்பட்டது. செப்டம்பர், 28ம் தேதி, 1864 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டின் லண்டன் நகரின் செயின்ட் மார்ட்டின் ஹாலில் கூடிய ஒரு தொழிலாளர்கள் கூட்டத்தில் நிறுவப்பட்டது. இந்த அமைப்பின் முதலாவது பேரவைக் கூட்டம் 1866 ஆம் ஆண்டு ஜெனீவா நகரில் கூட்டப்பட்டது. மார்க்சீயர்கள், அராஜகவாதிகள், பிளாங்குயிஸ்டுகள், ஓவனியர்கள், இத்தாலிய குடியரசுவாதிகள், அமெரிக்க அராஜக சின்டிகலிஸ்டுகள் மற்றும் தொழிலாளர் சங்கங்கள் இதில் உறுப்பினர்களாக இருந்தனர். மார்க்சீயர்களுக்கும் அராஜகவாதிகளுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் கூர்மையடைந்ததால் 1872 ஆம் ஆண்டு இரண்டாகப் பிளவு பட்டது. அகிலத்தில் அராஜகவாதிகளின் கை ஓங்கியதைத் தொடர்ந்து 1876 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது. மீண்டும் புதிதாக இரண்டாம் அகிலமானது 1889 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

# ஏகாதிபத்தியம், தொழிலாளர் பிரபுக்குலம், முதலாளித்துவத் தொழிலாளர் கட்சிகள், சமூக-தேசியவெறி மற்றும் சந்தர்ப்பவாதம் ஆகியவற்றுக்கு இடையேயான உறவு குறித்து..

(1916 அக்டோபரில், அதாவது முதலாவது உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், ரஷ்யப் புரட்சிக்கு ஓராண்டு முன்னால் தோழர் லெனின் அவர்களால் எழுதப்பெற்று 'ஏகாதிபத்தியமும் சோசலிசத்தில் பிளவும்' என்ற தலைப்பில் அச்சாகியுள்ள கட்டுரையின் சற்றே சுருக்கப்பட்ட பகுதி. படிப்பதற்கும் புரிந்துகொள்வதற்கும் வசதியாக இருக்கும் பொருட்டு கூடுதல் பத்திகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதில் பயன்படுத்தப்பெறும் ஆளுமைகளின் பெயர்கள், தமிழ்நாட்டு வாசகருக்கு அந்நியமான சொற்கள் குறித்த விளக்கக் குறிப்புகள் இயன்றவரை தரப்பட்டுள்ளது. நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் பாட்டாளிவர்க்கப் போராட்டத்தின் வழியில் அதிக முக்கியத்துவம் உள்ள ஒரு படைப்பு. மீண்டும் மீண்டும் படிக்கவும் புரிந்துகொள்ளவும் அவசியமானது.)

*ஏகாதிபத்தியத்திற்கும் ஐரோப்பாவில் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதம் சமூக-தேசிய வெறியின் வடிவில் கண்டிருக்கும் ஈனத்தனமான, அருவருக்கத்தக்க வெற்றிக்கும் ஒட்டுறவு உண்டா?*

*இது நவீனகால சோசலிசத்திற்குரிய அடிப்படைப் பிரச்சினையாகும். முதலாவதாக, நாம் வாழும் இச் சகாப்தமும் தற்போது நடைபெறும் யுத்தமும் ஏகாதிபத்தியத் தன்மை வாய்ந்தவை என்பதையும், இரண்டாவதாக, சமூக-தேசிய வெறியும் சந்தர்ப்பவாதமும் பிரிக்க முடியாதவாறு வரலாற்று வழியில் இணைந்திருக்கின்றன என்பதையும், மற்றும் அரசியல் சித்தாந்தத்தில் உள்ளார்ந்த முறையில் இவை ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன என்பதையும் நமது கட்சி வெளியீடுகளில் முழு அளவிற்கு நிலைநாட்டிவிட்ட நாம், இந்த அடிப்படைப் பிரச்சினையைப் பகுத்தாராய முற்படலாம், அவசியம் முற்பட்டாக வேண்டும்.*

## ஏகாதிபத்தியத்தின் இலக்கணம்

*ஏகாதிபத்தியம் குறித்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு துல்லியமான, முழுமையான இலக்கணத்தை அளித்து நாம் இந்தப் பகுப்பாய்வைத் தொடங்க வேண்டும். ஏகாதிபத்தியமானது (1) ஏகபோக முதலாளித்துவமாகும்; (2) புல்லுருவித்தனமான அல்லது அழுகத் தொடங்கிவிட்ட முதலாளித்துவமாகும்; (3) அந்திமக்கால முதலாளித்துவமாகும்.*

*தடையற்ற போட்டி நீக்கப்பெற்று அதற்குப் பதிலாய் ஏகபோகம் வளர்ச்சியுறுவதானது ஏகாதிபத்தியத்தின் அடிப்படைப் பொருளாதார இயல்பு, அதன் சாரப்பொருள்.*

## ஏகபோகத்தின் வடிவங்கள்

*ஏகபோகத் தன்மை பிரதானமான ஐந்து வடிவங்களில் வெளிப்படுகிறது: (1) கார்ட்டல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகள் — முதலாளிகளது இந்த ஏகபோகக் கூட்டுகள் தோற்றுவிக்கப்படும் அளவிற்கு பொருளுற்பத்தியின் ஒன்றுகுவிப்பு வளர்ந்துவிடுகிறது; (2) பெரிய வங்கிகளின் ஏகபோக நிலை — அமெரிக்கா, பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் மூன்று, நான்கு அல்லது ஐந்து பகாசுர வங்கிகள் நாட்டின் பொருளாதார வாழ்வு அனைத்தையும் தம் பிடியில் இருத்திக் கொண்டு ஆட்டிப் படைக்கின்றன; (3) மூலப்பொருள்களுக்கான ஆதாரங்களை முதலாளித்துவ டிரஸ்டுகளும் நிதி ஆதிக்கக் கும்பலும் கைப்பற்றிக் கொண்டுவிடுகின்றன. (நிதி மூலதனம் என்பது வங்கி மூலதனத்துடன் இணைந்த ஏகபோகத் தொழில்துறை மூலதனமாகும்); (4) சர்வதேசக் கார்ட்டல்கள் உலகைத் தம்மிடையே பொருளாதார ரீதியாகக் கூறுபோட்டுப் பாகப் பிரிவினை செய்து கொள்வது ஆரம்பமாகிவிட்டது. இவ்வகைச் சர்வதேசக் கார்ட்டல்கள் ஏற்கனவே ஒரு நூறுக்கு மேற்பட்டவை உள்ளன; இவை உலகச் சந்தை அனைத்தையுமே தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்திக் கொண்டு, அதனை "இணக்கமுடன்" தம்மிடையே பாகப்பிரிவினை செய்து கொள்கின்றன — யுத்தத்தின் மூலம் அதை மறுபிரிவினை செய்யப்படும் வரை இந்த ஏற்பாடு நீடிக்கிறது. ஏகபோகமல்லாத முதலாளித்துவத்தில் நடைபெற்று வந்த பண்ட ஏற்றுமதியைப் போலல்லாது இப்பொழுது மூலதனமே ஏற்றுமதி செய்யப்படுவதானது இக்கட்டத்துக்குரிய தனி விசேஷமாகும்; இது பொருளாதார வழியிலும் பிரதேச-அரசியல் வழியிலும் உலகின் பாகப் பிரிவினையுடன் நெருங்கிய முறையில் இணைந்த நிகழ்ச்சியாகும். (5) உலகின் பிரதேசம் (காலனிகள்) பங்கிட்டுக் கொள்ளப்படுதல் நிறைவுற்றுவிட்டது.*

## ஏகாதிபத்தியம் உருப்பெற்ற காலம்

*முதலாளித்துவத்தின் உச்ச கட்டமான ஏகாதிபத்தியம் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும், பிற்பாடு ஆசியாவிலும் 1898க்கும் 1914க்கும் இடையில் இறுதி உருப்பெற்றது. ஸ்பானிய-அமெரிக்கப் போர் (1898), ஆங்கிலோ-போயர் போர் (1899-1902), ருஷ்ய-ஜப்பானியப் போர் (1904-05), 1900ல் ஐரோப்பாவில் வெடித்த பொருளாதார நெருக்கடி ஆகிய இவை, உலக வரலாற்றின் இந்தப் புதிய சகாப்தத்துக்குரிய முக்கிய மைல்கற்களாகும்.*

## அழுகத் தொடங்கிவிட்ட முதலாளித்துவம்

*புல்லுருவித்தனமுடையதாகிவிட்ட அல்லது அழுகத் தொடங்கிவிட்ட முதலாளித்துவமே ஏகாதிபத்தியம் என்பது. உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமை நிலவும் அமைப்பில் ஒவ்வொரு ஏகபோகத்திற்குரிய குண விசேஷமாய் அமைந்துவிடும் அழுகல் போக்கில் யாவற்றுக்கும் முதலாய் வெளியாகிறது. ஜனநாயக-குடியரசுவாத ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும், பிற்போக்கு-முடியரசுவாத ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் இடையிலான வேறுபாடு மறைந்து வருகிறது; இரு வகையினருமே உயிருள்ள நிலையிலேயே அழுகத் தொடங்கிவிட்டதே இதற்குக் காரணம் (ஆனால் தொழில் துறையின் தனிப்பட்ட கிளைகளிலும், தனிப்பட்ட சில நாடுகளிலும், தனிப்பட்ட சில காலங்களிலும் முதலாளித்துவம் அசாதாரண வேகத்தில் வளர முடியாது என்பதல்ல இதன் அர்த்தம்).*

இரண்டாவதாக, தமது மூலதனத்தைக் கொண்டு சுகஜீவிகளாய்ச் "சீட்டுக்கத்தரித்து" ஜீவிக்கும் முதலாளிகளின் ஒரு பெரும் பிரிவு தோற்றுவிக்கப்படுவதில் முதலாளித்துவத்தின் அழுகல் தன்மை வெளியாகிறது. இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கியநாடு, பிரான்சு, ஜெர்மனி — தலைமையிலான இந்நான்கு ஏகாதிபத்திய நாடுகளில் ஒவ்வொன்றிலும் பணவுறுதிச் சீட்டுகளில் 10,000 அல்லது 15,000 கோடி பிராங்கு வரை மூலதனம் போடப்பட்டிருக்கிறது; இதிலிருந்து இந்நாடுகள் ஒவ்வொன்றும் ஆண்டுக்கு ஐந்நூறு கோடியிலிருந்து எண்ணூறு கோடிக்குக் குறையாமல் வருமானம் பெறுகிறது.

மூன்றாவதாக, மூலதன ஏற்றுமதியானது புல்லுருவித்தனம் உச்சநிலைக்கு உயர்ந்துவிடுவதைக் குறிக்கிறது.

நான்காவதாக, "நிதி மூலதனம், ஆதிக்கத்திற்காகப் பாடுபடுகிறதேயன்றி சுதந்திரத்திற்காக அல்ல". அரசியல் பிற்போக்கு சர்வவியாபகம் ஆகிவிடுவது ஏகாதிபத்தியத்திற்குரிய குணவிசேஷமாகும். பிரம்மாண்ட அளவிலான லஞ்சமும் ஊழலும் எல்லா வகையான பனாமா விவகாரங்கும் மலிந்துவிடுகின்றன.

ஐந்தாவதாக, ஒடுக்கப்படுகிற தேசங்கள் மீதான சுரண்டல் — இது நாடுபிடித்து இணைக்கும் முயற்சிகளுடன் இரண்டறக் கலந்ததாகும் — இன்னும் முக்கியமாய் ஒருசில "பேரரசுகளின்" சுரண்டல், "நாகரிக" உலகினைக் கோடானு கோடியான பின்தங்கிய தேசத்தவர்களின் இரத்தத்தை உறிஞ்சும் புல்லுருவியாக மேலும் மேலும் மாற்றிவருகிறது. ரோமானியப் பாட்டாளி சமுதாயத்தின் செலவில் வாழ்ந்தான்; ஆனால் நவீன காலச் சமுதாயம் நவீனகாலப் பாட்டாளியின் செலவில் வாழ்கிறது. ***சிஸ்மொண்டி***யின் பொருட் செறிவுள்ள இந்த வாக்கியத்தை மார்க்ஸ் வலியுறுத்திக் குறிப்பிட்டார். ஏகாதிபத்தியமானது இந்நிலைமையை ஓரளவு மாற்றியுள்ளது. ஏகாதிபத்திய நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தில் சலுகை படைத்த மேல்தட்டுப் பகுதி ஓரளவுக்கு, கோடானு கோடியான பின்தங்கிய தேசத்தவர்களின் செலவில் வாழ்கிறது.

## சோசலிசத்திற்கு மாறிச் செல்வதற்குரிய கட்டம்

ஏகாதிபத்தியமானது அந்திமக்கால முதலாளித்துவமாய், சோசலிசத்திற்கு மாறிச் செல்வதற்குரிய முதலாளித்துவமாய் இருப்பது ஏனென்பது நன்கு விளங்குகிறது: முதலாளித்துவத்திலிருந்து முளைக்கும் ஏகபோகமானது ஏற்கனவே மரிக்கத் தொடங்கிவிட்ட முதலாளித்துவத்தை, சோசலிசத்திற்கு அது மாறிச் செல்வதற்கான கட்டத்தின் துவக்கத்தைக் குறிப்பதாகும். ஏகாதிபத்தியத்தால் உழைப்பு மகத்தான அளவிற்கு சமூகமயமாக்கப் படுவதாலும் (ஏகாதிபத்தியத்தின் ஆதரவாளர்களான முதலாளித்துவப் பொருளியலாளர்கள் இதனைப் "பின்னிப்பிணைதல்" என்பதாகக் குறிப்பிடுகிறார்கள்) இதே விளைவு உண்டாகிறது.

## காவுத்ஸ்கியின் தவறான கருத்தோட்டம்

ஏகாதிபத்தியத்துக்கு நாம் அளித்திடும் இந்த இலக்கணம் கார்ல் காவுத்ஸ்கிக்கு நேர் முரணான நிலைக்குக் கொண்டு வருகிறது. ஏகாதிபத்தியத்தை "முதலாளித்துவத்தின் ஒரு கட்டமாகக்" கருத காவுத்ஸ்கி மறுக்கிறார். நிதி மூலதனத்தால் "உகந்ததென விரும்பி ஏற்கப்படும்" ஒரு கொள்கை என்று, "தொழில் துறை நாடுகள் விவசாய நாடுகளைப் பிடித்துத் தம்முடன் இணைத்துக் கொள்வதற்குரிய ஒரு போக்கு என்று அதற்கு அவர் இலக்கணம் கூறுகிறார்.

ஏகாதிபத்தியத்தைப் பற்றி காவுத்ஸ்கிக்கு உள்ள "கருத்தோட்டம்" ..... சமூக-மிதவாதி ஜே.ஏ.ஹாப்சனுடன் ஒப்பிடும்போது பின்னோக்கிச் செல்வதாயுள்ளது. பிரிட்டிஷ் பொருளியலாளரான இந்த ஹாப்சன் எவ்வகையிலும் தம்மை மார்க்சியவாதியாகக்

*கூறிக் கொள்ளவில்லை. அவருங்கூட 1902ல் வெளியான ஒரு புத்தகத்தில் மேலும் ஆழமான முறையில் ஏகாதிபத்தியத்திற்கு இலக்கணம்கூறி, அதன் முரண்பாடுகளை வெளிப்படுத்திக் காட்டுகிறார். காவுத்ஸ்கியின் சாத்வீகவாத, "இணக்கம் காணும்" கயமைக் கருத்துக்களில் அனேகமாய் யாவற்றையுமே அவருடைய புத்தகத்தில் காணலாம். ஏகாதிபத்தியத்தின் புல்லுருவித்தனம் என்னும் மிக முக்கியப் பிரச்சினை குறித்து* ***ஹாப்சன்*** *எழுதியதாவது: ஹாப்சனின் கருத்துப்படி இருவித நிலைமைகளால் பழைய சாம்ராஜ்யங்கள் பலம் இழக்கலாயின: (1) "பொருளாதாரப் புல்லுருவித்தனம்", (2) சார்பு நாடுகளின் மக்களிடையிலிருந்து சேனைகள் திரட்டப்படுதல்.*

"பொருளாதாரப் புல்லுருவித்தனத்துக்குரிய பழக்கம் முதலாவதாகும். ஆதிக்கம் புரியும் அரசு தனது ஆளும் வர்க்கத்தைச் செல்வச் செழிப்புடையதாக்கிக் கொள்வதற்காகவும், தனது கீழ்நிலை வர்க்கங்களுக்கு லஞ்சம் கொடுத்து அவற்றைத் தனக்கு இணங்கி நடக்குமாறு செய்வதற்காகவும் தனது மாநிலங்களையும், சார்பு நாடுகளையும் பயன்படுத்திக் கொள்வதே இது.

*சமூக-மிதவாதியான ஹாப்சன், (ஏகாதிபத்தியத்தை ஆட்டிப்படைக்கும் சக்திகளை) "எதிர்த்தடிப்பது" என்பது புரட்சிகரமான பாட்டாளி வர்க்கம் ஒன்றால் மட்டுமே முடியும், சமுதாயப் புரட்சியின் வடிவில் மட்டுமே இது நடைபெற முடியும் என்பதைப் பார்க்கத் தவறிவிடுகிறார். ஆனால் அவர் சமூக-மிதவாதியானதால் இதில் வியப்பேதுமில்லை. இருந்தபோதிலும் 1902 ஆம் ஆண்டிலேயே "ஐரோப்பிய ஐக்கிய நாடு" என்பதன் உட்பொருள் குறித்தும், அதன் விளைவுகள் குறித்தும் தேர்ந்த திருஷ்டியுடையவராய் இருந்தார். (காவுத்ஸ்கிவாதியான ட்ராட்ஸ்கியின் நன்மைக்காக இதைக் குறிப்பிட்டாக வேண்டும்.) மற்றும் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த கபட நாடகக் காவுத்ஸ்கிவாதிகள் தற்போது மூடிமெழுகிவரும் யாவற்றின் உட்பொருளையும் விளைவுகளையும் பற்றி, அதாவது ஆசியா, ஆப்பிரிக்காவின் முதுகிலே அமர்ந்த ஏகாதிபத்திய ஐரோப்பா ஒன்றைத் தோற்றுவிக்கும் ஒரே நோக்கத்திற்காகத்தான் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருடன் சந்தர்ப்பவாதிகள் (சமூக-தேசிய வெறியர்கள்) ஒத்துழைக்கிறார்கள். எதார்த்த நோக்குடன் பார்க்கும்போது சந்தர்ப்பவாதிகள் குட்டி பூர்ஷ்வாக்களையும், ஏகாதிபத்திய உபரிலாபங்களின் துணை கொண்டு லஞ்சம் தரப்பட்டு விலைக்கு வாங்கப்பட்டு முதலாளித்துவத்தின் காவல் நாய்களாகவும் தொழிலாளர் இயக்கத்தைப் பாழ்படுத்தும் மோசடிக்காரர்களாகவும் மாற்றப்பட்டிருக்கும் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு வகுப்பினரையும் சேர்ந்த பகுதியோரே ஆவர் என்ற இவ்வுண்மையின் உட்பொருளையும் விளைவுகளையும் பற்றி அன்றே ஹாப்சன் தேர்ந்த திருஷ்டியுடையவராய் இருந்தார்.*

## சமூக-தேசிய வெறிக்கு எதிரான போராட்டம்

*ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும், தொழிலாளர் இயக்கத்தில் வெற்றி பெற்றுவிட்ட சந்தர்ப்பவாதத்துக்கும் இடையிலுள்ள இணைப்பை, மிகவும் ஆழமான இணைப்பை, நாம் கட்டுரைகளில் மட்டுமல்ல, நமது கட்சியின் தீர்மானங்களிலும் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டு வந்திருக்கிறோம். இதிலிருந்து நாம் சமூக-தேசிய வெறியர்களிடமிருந்து பிளவுபடுவது தவிர்க்க முடியாததென்ற முடிவுக்கு வந்ததையும் இங்கு எடுத்துரைக்கலாம். ஆனால் நமது காவுத்ஸ்கிவாதிகள் இப்பிரச்சினையைத் தட்டிக் கழித்தே வந்துள்ளனர்.*

*பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தின் — ஐரோப்பிய முதலாளித்துவம் அல்லது ஏகாதிபத்திய முதலாளித்துவம் மட்டுமின்றி உலக முதலாளித்துவம் அனைத்தின் — பிள்ளையாகும். உலக அளவில், ஐம்பது ஆண்டுகள் முந்தியோ ஐம்பது ஆண்டுகள்*

*பிந்தியோ "பாட்டாளி வர்க்கம்" ஒற்றுமை "அடைந்துவிடும்" என்பதிலும், புரட்சிகர சமூக-ஜனநாயகம் "தவிர்க்க முடியாதபடி" அதனுள் வெற்றிவாகை சூடிவிடும் என்பதிலும் ஐயமில்லை.*

*ஆனால், காவுத்ஸ்கிவாத கனவான்களே, அதுவல்ல விவகாரம். தற்போது விவகாரம் என்னவெனில் ஐரோப்பாவின் ஏகாதிபத்திய நாடுகளில் நீங்கள் சந்தர்ப்பவாதிகளுடன் குலாவிக் கொண்டிருக்கிறீர்கள் — இவர்கள் பாட்டாளி வர்க்கத்திற்கு ஒரு வர்க்கம் என்ற முறையில் புறம்பானவர்கள்; இவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் தாசர்கள், அதன் கையாட்கள், அதன் செல்வாக்கைக் கொண்டுவந்து பரப்பும் சாதனங்களாகப் பணியாற்றுகிறவர்கள். தொழிலாளர் இயக்கம் அவர்களைத் தன்னிடமிருந்து களைந்தெறியாதவரை, அது முதலாளித்துவத் தொழிலாளர் இயக்கமாகவே இருக்கும்.*

*சந்தர்ப்பவாதிகளுடன் "ஒற்றுமையை" ஆதரித்து வாதிடுவதன் மூலம் நீங்கள் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர் இயக்கத்திலுள்ள தனது சிறந்த கையாட்களின் துணையுடன் தொழிலாளர்களை அடிமைப்படுத்திக் கொள்வதை எதார்த்த ரீதியில் ஆதரிக்கிறீர்கள். புரட்சிகர சமூக-ஜனநாயகத்தின் உலக அளவிலான வெற்றி தவிர்க்க முடியாததுதான்; ஆனால் அது உங்களை எதிர்த்துத்தான் நடைபெறுகிறது. இனியும் நடைபெறும். உங்களை எதிர்த்துத்தான் முன்னேறிச் செல்கிறது, இனியும் முன்னேறிச் செல்லும்; அது உங்கள் மீதான வெற்றியாகவே திகழும்.*

## மார்க்ஸ் எங்கெல்ஸ் எழுத்துக்களில் 'தொழிலாளர் பிரபுக்குலம்'

*இன்றையத் தொழிலாளர் இயக்கத்திலுள்ள இவ்விரு போக்குகளையும் (இவ்விரு கட்சிகளையும்) உலகெங்கும் 1914-16ல் தெட்டத் தெளிவாகப் பிரிந்து விலகிச் சென்றுவிட்ட இவ்விரு போக்குகளையும் பல பத்தாண்டுகள் அடங்கிய காலப் பகுதியில், ஏறத்தாழ 1858 லிருந்து 1892 வரை, எங்கெல்சும் மார்க்சும் இங்கிலாந்தில் கண்ணுற்று விவரித்துக் கூறினர்.*

*உலக முதலாளித்துவத்தின் ஏகாதிபத்தியச் சகாப்தம் தொடங்கிய காலத்தில் மார்க்சோ, எங்கெல்சோ உயிருடன் இருக்கவில்லை. இச்சகாப்தம் 1898-1900க்கு முன்னதாக ஆரம்பமாகவில்லை. ஆனால் இங்கிலாந்தின் விசேஷம் என்னவெனில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே அது, குறைந்தபட்சம் ஏகாதிபத்தியத்துக்குரிய இரண்டு முக்கிய தனி இயல்புகளை வெளிப்படுத்தி வந்தது: (1) மிகவும் பரவலான காலனிகள், (2) ஏகபோக லாபம் (உலகச் சந்தையில் அதற்கிருந்த ஏகபோக நிலையே இதற்குக் காரணம்). இவ்விரு இயல்புகளிலும் அன்று இங்கிலாந்து முதலாளித்துவ நாடுகளிடையே ஒரு விதிவிலக்காய் விளங்கிற்று. இந்த விதி விலக்கைப் பரிசீலனை செய்த எங்கெல்சும் மார்க்சும் ஆங்கிலேயத் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதம் பெற்ற (தற்காலிக) வெற்றியுடன் இதற்குள்ள தொடர்பைத் தெட்டத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் சுட்டிக் காட்டினர்.*

*1858 அக்டோபர் 7 தேதியிட்டு மார்க்சுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் எங்கெல்ஸ் இவ்வாறு குறிப்பிடுகிறார்: "... ஆங்கிலேயப் பாட்டாளி வர்க்கம் மெய்யாகவே மேலும் மேலும் முதலாளித்துவமயமாகி வருகிறது. எல்லாத் தேசங்களிலும் மிகவும் முதலாளித்துவ மயமான இங்கிலாந்து இவ்வாறாக முதலாளித்துவ வர்க்கத்துடன் கூடவே ஒரு முதலாளித்துவப் பிரபுக் குலம் ஒன்றையும், முதலாளித்துவப் பாட்டாளி வாக்கம் ஒன்றையும் பெற வேண்டுமென்ற இறுதிக் குறிக்கோளைக் கொண்டிருப்பதாகத தோன்றுகிறது. அனைத்து உலகையும் சுரண்டும் ஒரு தேசத்துக்கு இது ஓரளவு நியாயமே".*

*"ஆங்கிலேயத் தொழிலாளர் தலைவர்கள் தம்மை விலைக்கு விற்றுக் கொண்டுவிட்டனர்" என்று கூறியதற்காக மார்க்சை எதிர்த்து* ***ஹேல்ஸ்*** *அகிலத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் ரகளை செய்ததாகவும், மார்க்சின்மீது ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியதாகவும் ஸோர்கேயிற்கு 1872 செப்டம்பர் 21 தேதியிட்ட தமது கடிதத்தில் எங்கெல்ஸ் தெரிவிக்கிறார்.*

*1874 ஆகஸ்டு 4ல் ஸோர்கேயிற்கு மார்க்ஸ் இவ்வாறு எழுதினார்: "இங்கே (இங்கிலாந்தில்) நகரத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, இத்தலைவர்களது கும்பல் முழுதுமே பாராளுமன்றத்துக்குப் போய்ச் சேராதது வருந்தத் தக்கதே. இக்கும்பல் முழுவதையும் தொலைத்துத் தலை முழுக அது சாலச் சிறந்த வழியாக இருந்திருக்கும்".*

*1881 ஆகஸ்டு 11 தேதியிட்டு மார்க்சுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் எங்கெல்ஸ் "முதலாளித்துவ வர்க்கத்தினரால் விலைக்கு வாங்கப்பட்டுவிட்ட அல்லது அவர்களால் ஊதியம் அளிக்கப்பட்டு வருகிற ஆட்கள் தமக்குத் தலைமை தாங்க அனுமதிக்கும் அந்தப் படுமோசமான ஆங்கிலேயத் தொழிற் சங்கங்கள்" என்பதாகக் குறிப்பிடுகிறார்.*

*காவுத்ஸ்கிக்கு 1882 செப்டம்பர் 12 தேதியிட்ட கடிதத்தில் எங்கெல்ஸ் எழுதினார்: "காலனிக் கொள்கை குறித்து ஆங்கிலேயத் தொழிலாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கேட்கிறீர்கள். என்ன நினைக்கிறார்கள், பொதுவாக அரசியலைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ அதுவேதான். இங்கு தொழிலாளர் கட்சி என்பதாக எதுவும் இல்லை, கன்சர்வேட்டிவ்கள், மிதவாத-தீவிரவாதிகள் மட்டுமேதான் உள்ளனர்; தொழிலாளர்களைப் பொறுத்தவரை உலகச் சந்தையிலும் காலனிகளிலும் இங்கிலாந்திற்குள்ள ஏகபோகத்தின் விருந்துணவில் அவர்கள் பங்கு பெற்றுக் களிப்புறுகின்றனர்".*

*1889 டிசம்பர் 7ல் ஸோர்கேயிற்கு எங்கெல்ஸ் எழுதினார்: "இங்கே (இங்கிலாந்தில்) மிகவும் அருவருக்கத் தக்கது என்னவெனில், தொழிலாளர்களுடைய இரத்தத்திலேயே கலந்துவிட்ட இந்த முதலாளித்துவ உயர்குல மனப்பான்மை... இவர்களில் மிகச் சிறந்தவராய் நான் கருதும்* ***டாம் மானு****ங்கூட மேன்மை தங்கிய நகர மேயருடன் விருந்துண்ணப் போவதாகக் கூறிக்கொள்வதில் தனி மகிழ்ச்சி காண்கிறார். பிரெஞ்சு நாட்டவருடன் ஒப்பிட்டுப் பார்த்தால், எப்படியும் புரட்சியால் விளையும் நன்மையை நன்கு உணரலாம்".*

*பல பத்தாண்டுகளாய் மீண்டும் மீண்டும் எங்கெல்ஸ் கூறிவந்த இந்தக் கருத்துக்கள் பகிரங்கமாய்ப் பொது வெளியீடுகளிலும் அவரால் எடுத்துரைக்கப்பட்டன என்பதற்கு 'இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை' என்ற நூலின் இரண்டாம் பதிப்பிற்கான (1892) அவருடைய முன்னுரை சான்றாகும். இதில் அவர் "தொழிலாளி வர்க்கத்தின் பெருந் திரளானோரைப்" போலல்லாத "தொழிலாளி வர்க்கப் பிரபுக் குலத்தோர் குறித்தும், தனிச் சலுகை படைத்த சிறுபான்மைத் தொழிலாளர்கள்" குறித்தும் கூறுகிறார்.*

*1848-68ல் இங்கிலாந்தின் தனிச் சலுகைக்குரிய நிலையால் தொழிலாளி வர்க்கத்தில் "சலுகை படைத்த பாதுகாப்பான ஒரு குறுகிய சிறுபான்மை" மட்டும்தான் "நிரந்தர ஆதாயமடைந்தது"; "மிகப் பெருவாரியான தொழிலாளர்கள் மிகச் சிறந்த நிலைமையிலுங்கூட தற்காலிக மேம்பாடுதான் பெற முடிந்தது"... "அந்த (இங்கிலாந்தின் தொழில் துறை) ஏகபோகம் தகர்ந்ததும், ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் தனிச் சலுகைக்குரிய நிலையினை இழந்துவிடும்...." "புதிய" தொழிற் சங்கங்களின், அதாவது தேர்ச்சியற்ற தொழிலாளர்களது சங்கங்களின் உறுப்பினர்கள் "மாபெரும் இந்த அனுகூலமுடையவர்களாவர்; அவர்களுடைய மனம் வசதிக்குரிய*

நிலைமையில் இருந்த 'பழைய சங்கங்களின் உறுப்பினர்களது' சிந்தனைக்கு இடையூறாய் இருந்த மரபுரிமையாக வந்த 'உயர்குல' முதலாளித்துவத் தப்பெண்ணங்களால் சிறிதும் களங்கமுறாத கன்னி நிலமாகும்"... இங்கிலாந்தில் "தொழிலாளர் பிரதிநிதிகள் எனப்படுவோர்" எத்தகையோர் என்றால், "தாம் தொழிலாளர்கள் என்பதற்குரிய தன்மையைத் தமது மிதவாதமெனும் கடலிலே மூழ்கடித்துவிட விரும்புகிறவர்கள், ஆதலால் தொழிலாளி வர்க்க உறுப்பினர்களாய் இருப்பதற்காக மன்னிப்பளிக்கப்பட்டவர்கள்"....

மார்க்ஸ், எங்கெல்ஸ் இவர்களது நேரடியான எழுத்துக்களிலிருந்து வேண்டுமென்றேதான் விரிவான மேற்கோள்கள் கூறியுள்ளோம். வாசகர் இவற்றை ஒட்டுமொத்தமாய்ப் பரிசீலனை செய்து பார்க்கும் பொருட்டே இவ்வாறு செய்துள்ளோம். இவை அவசியம் படித்தறிய வேண்டியவை. கவனமாய்ச் சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டியவை. ஏனெனில் தொழிலாளர் இயக்கத்தின் போர்த்தந்திரத்திற்கு, ஏகாதிபத்தியச் சகாப்தத்தின் எதார்த்த நிலைமைகளால் அவசியமாக்கப்படும் இந்தப் போர்த் தந்திரத்திற்கு அச்சாணியாக அமைந்தவை இவை.

## காவுத்ஸ்கியின் நாசுக்கான பொய்க்கூற்று

இங்குங்கூட காவுத்ஸ்கி பிரச்சினையைக் குழப்பிவிடவும், மார்க்சியத்திற்குப் பதிலாய்ச் சந்தர்ப்பவாதிகளுடன் மனங்கனிந்து இணக்கம் காணும் போக்கை அனுசரிக்கவும் முயலுகிறார். ஜெர்மனி யுத்தத்தில் இறங்கியது இங்கிலாந்தின் ஏகபோகத்தை ஒழித்திடுவதற்கான ஒரு மார்க்கமாகுமெனக் கூறி அதற்கு நியாயம் கற்பிக்கும் சிறுபிள்ளைத் தனமான அப்பட்டமான சமூக-ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்து வாதிடும் காவுத்ஸ்கி, அப்பட்டமான இந்தப் பொய்க்கூற்றை இதே போன்று அப்பட்டமான மற்றொரு பொய்க்கூற்றைக்கொண்டு "திருத்திச் சரிசெய்கிறார்". அகோரமான ஒரு பொய்க்கூற்றுக்குப் பதிலாய் அவர் நாசுக்கான ஒரு பொய்க்கூற்றைக் கையாளுகிறார்! இங்கிலாந்தின் தொழில் துறை ஏகபோகம் நெடுங்காலத்துக்கு முன்பே ஒழிக்கப்பட்டு விட்டது என்றும், ஒழிப்பதற்கு இனி எதுவும் விட்டு வைக்கப்படவில்லை என்றும் கூறுகிறார்.

## ஏன் இது பொய்யான வாதமாகிறது?

ஏனெனில், முதலாவதாக, இது இங்கிலாந்தின் காலனித்துறை ஏகபோகத்தைக் கவனியாது ஒதுக்கிவிடுகிறது. ஆயினும், நாம் மேலே கண்டது போல, ஏங்கெல்ஸ் 1882 லேயே, முப்பத்திநான்கு ஆண்டுகளுக்கு முன்பே இதை மிகத் தெளிவாய் எடுத்துரைத்திருந்தார்! இங்கிலாந்தின் தொழில் துறை ஏகபோகம் ஒழிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் காலனித் துறை ஏகபோகம் அழியாதிருப்பதோடு மேலும் கடுமையாக உக்கிரமாகியுள்ளது, ஏனெனில் அனைத்துலகும் ஏற்கனவே பிரித்துப் பங்கிடப்பட்டுக் கொண்டுவிட்டது! இந்த நாசுக்கான பொய்யின் மூலம் காவுத்ஸ்கி "போராடுவதற்கு ஒன்றுமில்லை" என்பதான முதலாளித்துவ-சாத்வீகவாத, சந்தர்ப்பவாத-குட்டிபூர்ஷுவாக் கருத்தைக் கள்ளத்தனமாய்ப் புகுத்திவிடுகிறார். இக்கருத்துக்கு நேர் மாறாய், இப்பொழுது முதலாளிகள் போராடுவதற்கு நிறைய இருப்பதுடன், முதலாளித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமாயின் அவர்களுக்குப் போராடுவதைத் தவிர வேறு வழியே இல்லை; ஏனெனில் காலனிகளைப் பலவந்தமாய் மறுபங்கீடு செய்யாமல் புதிய ஏகாதிபத்திய நாடுகள் பழைய (பலவீனமாகிவிட்ட) ஏகாதிபத்திய அரசுகள் அனுபவிக்கும் தனிச் சலுகைகளைப் பெற முடியாது.

இரண்டாவதாக, இங்கிலாந்தின் ஏகபோகம் இங்கிலாந்தில் சந்தர்ப்பவாதத்தின்

(தற்காலிக) வெற்றிக்குக் காரணமாவது எப்படி? எப்படியெனில், ஏகபோகத்தால் உபரி லாபங்கள் கிடைக்கின்றன. அதாவது உலகெங்கும் முறையாகவும் வழக்கமாகவும் கிடைக்கும் முதலாளித்துவ லாபங்களைக் காட்டிலும் அதிகப்படியான லாபங்கள் கிடைக்கின்றன. முதலாளிகள் இந்த உபரிலாபங்களில் ஒரு பகுதியை (அது ஒன்றும் சிறிய பகுதி அல்ல) தமது சொந்த நாட்டுத் தொழிலாளர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக, பிற நாடுகளுக்கு எதிராய் அந்த நாட்டின் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய முதலாளிகளுக்கும் இடையே ஒரு கூட்டுக்கு ஒப்பானதொன்றை தோற்றுவிப்பதற்காக உபயோகித்துக் கொள்ள முடிகிறது.

இங்கிலாந்தின் தொழில்துறை ஏகபோகம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள்ளாகவே ஒழிக்கப்பட்டுவிட்டது. இது மறுக்க முடியாத உண்மை. ஆனால் இது எப்படி நடந்தேறியது? ஏகபோகத்தின் எல்லா வகைகளுமே மறைந்தாவிட்டன? அவ்வாறு மறைந்திருப்பின் சந்தர்ப்பவாதிகளுடன் இணக்கம் காண்பதென்ற காவுத்ஸ்கியின் "தத்துவம்" ஓரளவு நியாயமானதாய் இருக்கும். ஆனால் அது அவ்வாறு மறைந்துவிடவில்லை; இதுவே இங்குள்ள விவகாரமாகும்.

## ஏகாதிபத்தியத்தின் சாராம்சம்

ஏகாதிபத்தியம் என்பது ஏகபோக முதலாளித்துவம் ஆகும். ஒவ்வொரு கார்ட்டலும், டிரஸ்டும், சிண்டிக்கேட்டும், பூதாகரமான ஒவ்வொரு வங்கியும் ஒரு ஏகபோகமே ஆகும். உபரிலாபங்கள் மறைந்துவிடவில்லை. இன்னமும் அவை இருந்து வருகின்றன. தனிச் தலுகை பெற்று நிதித் துறையில் செல்வந்தராயுள்ள ஒரு நாடு ஏனைய எல்லா நாடுகளையும் சுரண்டுவது மறையாமல் தொடர்ந்து இருப்பதுடன் மேலும் கடுமையும் ஆகியுள்ளது. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில செல்வந்தர் நாடுகள் பிரம்மாண்ட அளவுகளுக்கு ஏகபோகத்தை வளர்த்துக் கொண்டு விட்டன; பத்துக் கோடிக்கணக்கில் செல்லும் (அல்லது நூறு கோடிக்கணக்கில் செல்லும்) உபரி லாபங்களைப் பெற்று வருகின்றன; பிற நாடுகளைச் சேர்ந்த கோடானு கோடியான மக்களின் "முதுகிலே சவாரி செய்கின்றன"; மிகவும் செழிப்பான, மிகவும் கொழுத்த, மிகவும் எளிதில் கிடைக்கக்கூடிய கொள்ளையைப் பங்கு போட்டுக் கொள்வதற்காகத் தம்மிடையே சண்டையிட்டுக் கொள்கின்றன. உண்மையில் இதுவே ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல் சாராம்சமாகும்; இதன் ஆழமான முரண்பாடுகளை அம்பலப்படுத்துவதற்குப் பதிலாய்க் காவுத்ஸ்கி மூடிமெழுகி விடுகிறார்.

## ஏகாதிபத்தியக் கொள்ளையிலிருந்து லஞ்சம் பெறும் தொழிலாளர் பிரபுக்குலம்

ஏகாதிபத்திய "வல்லரசு" ஒன்றின் முதலாளித்துவ வர்க்கத்துக்குக் கிடைக்கும் உபரிலாபங்கள் பெரும்பாலும் நூறு கோடிப் பிராங்குக் கணக்கில்தான் இருக்குமாதலால், அதனால் ஆண்டுக்குப் பத்துக் கோடிப் பிராங்கு வீதம் செலவிட்டுத் "தனது" தொழிலாளர்களின் மேல்தட்டினருக்குப் பொருளாதார வழியில் லஞ்சம் கொடுத்து அவர்களைத் தன்பால் ஈர்த்துக் கொண்டுவிட முடியும். இந்தச் சொற்பக் கைக்கூலி, தொழிலாளர் அமைச்சர்கள், "தொழிலாளர் பிரதிநிதிகள்" (இந்த சொற்றொடருக்கு எங்கெல்ஸ் அளித்த ஒப்பற்ற விளக்கத்தை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்), இராணுவ-தொழில் கமிட்டிகளின் தொழிலாளர் உறுப்பினர்கள், தொழிலாளர்-அதிகாரிகள், குறுகிய தொழிலுக்கான சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், அலுவலகச் சிப்பந்திகள் போன்ற பல தரப்பட்டோரிடையிலும் எப்படிப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்பது இரண்டாந்தரப் பிரச்சினையே.

*1848க்கும் 1868க்கும் இடையிலும், ஓரளவுக்கு அதற்குப் பிற்பாடுங்கூட இங்கிலாந்து மட்டும்தான் ஏகபோக நிலை அனுபவித்து வந்தது; எனவேதான் அங்கு பல பத்தாண்டுகளுக்குச் சந்தர்ப்பவாதம் வெற்றியடைய முடிந்தது. வேறு எந்த நாடும் மிகுந்த வளமுடைய காலனிகளோ, தொழில் துறை ஏகபோகமோ பெற்றிருக்கவில்லை.*

*பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி மூன்றாம் கூறில் புதிய, ஏகாதிபத்தியச் சகாப்தத்துக்கான மாற்றம் ஏற்பட்டது. ஒரு வல்லரசல்ல. ஒரு சிலவே ஆயினும், பல வல்லரசுகளது நிதி மூலதனம் இப்பொழுது ஏகபோக நிலை அனுபவிக்கலாயிற்று. (ஜப்பானிலும் ரஷ்யாவிலும் இராணுவ பலம், பெரும் பரப்புகள் அல்லது சிறுபான்மைத் தேசிய இனங்களையும் சீனாவையும் இன்ன பிறவற்றையும் சூறையாடுவதற்கான தனி வசதிகள் முதலியவற்றாலான ஏகபோகம், நவீன கால, நூதன நிதி மூலதனத்தின் ஏகபோகத்துக்கு ஓரளவு இணையாகவும் ஓரளவு பதிலாகவும் செயல்படுகிறது. இங்கிலாந்தின் ஏகபோக நிலை பல பத்தாண்டுகளுக்கு எதிர்ப்பின்றியே இருக்க முடிந்ததற்கு இந்த வித்தியாசமே காரணமாகும்.*

*நவீன கால நிதி மூலதனத்தின் ஏகபோகத்திற்கு மூர்க்கத்தனமான எதிர்ப்பு மூண்டு வருகிறது; ஏகாதிபத்திய யுத்தங்களுக்கான சகாப்தம் தொடங்கிவிட்டது. அந்நாட்களில் ஒரு நாட்டின் தொழிலாளி வர்க்கத்திற்குப் பல பத்தாண்டுகளுக்கு லஞ்சம் கொடுத்துக் கெடுத்து வருவது சாத்தியமாயிருந்தது. இப்பொழுது அது அசாத்தியமாகிவிடவில்லை என்றாலுங்கூட எதிர்பார்க்கத்தக்கதல்ல. ஆனால் ஏகாதிபத்திய "வல்லரசு" ஒவ்வொன்றும் (1848-68 காலகட்டத்தில் இங்கிலாந்தில் தரமுடிந்ததைவிட) சிறிய பிரிவான "தொழிலாளர் பிரபுக்குலத்தினருக்கு" லஞ்சம் தரமுடிகிறது, தரவும் செய்கிறது.*

## முதலாளித்துவத் தொழிலாளர் கட்சி ஏகாதிபத்தியத்தின் விளைவு

*முன்பெல்லாம் "முதலாளித்துவத் தொழிலாளர் கட்சி" ஒரேயொரு நாட்டில் மட்டும்தான் தோன்ற முடிந்தது. ஏனெனில், இந்த ஒரு நாடு மட்டும்தான் ஏகபோக நிலைக்குரியதாக இருந்தது. ஆனால் இங்கு அந்தக் கட்சி நீண்ட காலத்துக்கு நீடிக்க முடிந்தது. இப்பொழுது ஏகாதிபத்திய நாடுகள் யாவற்றிலும் "முதலாளித்துவத் தொழிலாளர் கட்சி" தவிர்க்க முடியாததும் இந்நாடுகளுக்குரிய குணதிசயமாகவும் இருந்துவருகிறது; ஆனால் கொள்ளையைப் பங்கிட்டுக் கொள்வதற்காக இந்நாடுகள் மூர்க்கமாய்ப் போராடுவதால், இத்தகைய ஒரு கட்சி அதிக காலத்துக்கு பல நாடுகளில் வெற்றியடையுமென எதிர்ப்பார்ப்பதற்கில்லை. ஏனெனில், டிரஸ்டுகளும் நிதியாதிக்கக் கும்பலும் உயர்ந்த விலைகளும் இன்ன பிறவும் மேல் மட்டத்துப் பிரிவில் ஒரு சிலருக்கு லஞ்சமளித்து விலைக்கு வாங்க வகை செய்யும் அதே நேரத்தில், பாட்டாளி வர்க்கத்தினரிலும் பகுதியளவு பாட்டாளி வர்க்கத்தினராய் இருப்போரிலும் மிகப் பெருந்திரளானோரை மேலும் மேலும் ஒடுக்கி நசுக்கி ஓட்டாண்டிகளாக்கி வாட்டி வதைத்து வருகின்றன.*

*ஒருபுறத்தில் சலுகை படைத்த செல்வமிக்க ஒருசில தேசங்களை மனித குலத்தின் பிறபகுதிகளின் இரத்தத்தை உறிஞ்சும் "நிரந்தரப்" புல்லுருவிகளாய் மாற்றுவதற்கும், நவீன இராணுவத் துறை வழங்கிடும் படுநாசத்துக்குரிய சிறந்த ஆயுதங்களின் துணை கொண்டு நீக்ரோக்களையும் இந்தியர்களையும் ஏனையோரையும் அடக்கியொடுக்கிச் சுரண்டிக் கொழுத்துச் சுகவாழ்வு நடத்த முயலும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் சந்தர்ப்பவாதிகளுக்குமுள்ள போக்கு செயல்படுகிறது.*

*மறுபுறத்தில் முன்னிலும் கடுமையாக ஒடுக்கப்பெற்று, ஏகாதிபத்திய யுத்தங்களின் முழுச் சுமையாலும் வருத்தப்படும் மக்கள் திரள் இந்த அடிமைத் தளைகளைத்*

தகர்த்தெறியவும் முதலாளித்துவ வர்க்கத்தைக் கவிழ்க்கவும் போராடும் போக்கு செயல்படுகிறது.

இந்த இரு போக்குகளிடையிலான போராட்டத்தில்தான் தவிர்க்க முடியாதபடி இப்பொழுது தொழிலாளர் இயக்கம் வளர்ச்சியுற்றாக வேண்டும். ஏனெனில் முதலாவது போக்கு தற்செயலாய்த் தோன்றிவிடவில்லை; அதற்குப் பொருளாதார “வேர்கள்” இருக்கின்றன.

எல்லா நாடுகளிலுமே முதலாளித்துவ வர்க்கம் ஏற்கனவே தனக்கு சமூக-தேசிய வெறியர்களது “முதலாளித்துவத் தொழிலாளர் கட்சிகளைத் ” தோற்றுவித்து, ஊட்டமளித்து நிலைபெறச் செய்துகொண்டுவிட்டது. முக்கிய உண்மை என்னவெனில், பொருளாதார வழியில், தொழிலாளர் பிரபுக்குலம் ஒன்று பிளந்து சென்று முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் சேர்ந்துவிடும் நிகழ்ச்சி முதிர்ச்சியுற்று எதார்த்த நிலவரமாகி விட்டது.

## சலுகைகளும், ரொட்டித் துண்டங்களும்

மேற்கூரிய பொருளாதார அடிப்படையின்மீது நவீன கால முதலாளித்துவத்தின் அரசியல் ஏற்பாடுகளான பத்திரிகைகள், பாராளுமன்றம், கழகங்கள், காங்கிரசுகள் முதலானவை உயர்குல மனப்பான்மையும் பணிவுமுடைய சீர்திருத்தவாத, தேசபக்த அலுவலகச் சிப்பந்திகளுக்கும் தொழிலாளர்களுக்கும், பொருளாதாரச் சலுகைகளுக்கும் ரொட்டித் துண்டங்களுக்கும் ஏற்றதான அரசியல் சலுகைகளையும், ரொட்டித் துண்டங்களையும் படைப்பித்திருக்கின்றன.

சர்க்காரிலே, இராணுவ-தொழில் கமிட்டியிலோ, பாராளுமன்றத்திலோ, பல்வேறு வகையான கமிஷன்களிலோ, சட்டமுறைப்படி வெளிவரும் “கவுரவமான” பத்திரிகைகளின் ஆசிரியர் குழாம்களிலோ, இதேபோல கவுரவமான “முதலாளித்துவ வர்க்கத்திற்குப் பணிந்து நடக்கும்” தொழிற் சங்கங்களின் நிர்வாகக் குழுக்களிலோ கொழுத்த சம்பளத்துக்குரிய சொகுசான பதவிகள் தரப்படுகின்றன. ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தினர் இந்த இரையை வைத்துத்தான் “முதலாளித்துவத் தொழிலாளர் கட்சிகளின்” பிரதிநிதிகளையும் ஆதரவாளர்களையும் கவர்ந்திழுத்துச் சன்மானம் அளிக்கின்றனர்.

அரசியல் ஜனநாயகத்தின் இயங்கு அமைப்பும் இதே திசையில்தான் செயல்படுகிறது. நாம் வாழும் இக்காலத்தில் தேர்தல்களின்றி எதுவும் நடைபெறாது: மக்கள் திரளின்றி அணுவும் அசையாது. அச்செழுத்துக்கும் பாராளுமன்ற முறைக்குமுரிய இச்சகாப்தத்தில், புகழ்ச்சி, பொய், பித்தலாட்டம், செல்வாக்குமிக்க புதிய மோஸ்தராகிவிட்ட மினுக்குச் சொற்களாலான வாய்ச்சவடால், தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்தைக் கவிழ்ப்பதற்கான புரட்சிப் போராட்டத்தைத் தவிர்க்கும் வரை அவர்களுக்கு எல்லா வகையான சீர்திருத்தங்களையும் வசதிகளையும் செய்து தருவதாய்க் கண்ணை மூடிக் கொண்டு வாக்குறுதியளித்தல் ஆகிய யாவும் அடங்கலாய் நன்கு அமைந்து பாங்குடன் நிர்வகிக்கப்படும் விரிவான வலைப்பின்னல் அமைப்பு இல்லாமல்  மக்கள் திரளினரைத் தன்னைப் பின்பற்றும்படிச் செய்வது சாத்தியமன்று.

## லாயிட் ஜார்ஜ்: ஒரு எடுத்துக்காட்டு

முதல்தர முதலாளித்துவச் சூழ்ச்சிக்காரரும், சாமர்த்தியமான அரசியல்வாதியும், நீங்கள் கேட்க விரும்பும் எந்தவிதச் சொற்பொழிவையும், தொழிலாளர் கூட்டத்திற்குரிய பு-ர்-ர்-ரட்சிகரச் சொற்பொழிவுகளையும்கூட நிகழ்த்தக்கூடிய செல்வாக்கு மிகுந்த பேச்சாளரும், சொன்னபடி கேட்கும் தொழிலாளர்களுக்கு சமூக

*சீர்திருத்தங்களின் வடிவில் (இன்ஸ்யூரன்ஸ் முதலான வசதிகளின் வடிவில்) பெரிய பெரிய ரொட்டித் துண்டங்கள் கிடைக்கச் செய்யக் கூடியவருமான லாயிட் ஜார்ஜ் முதலாளித்துவ வர்க்கத்திற்குச் சிறப்பான முறையில் சேவை புரிகிறார்; அதுவும் தொழிலாளர்களிடையே சென்று முதலாளித்துவத்திற்குச் சேவை புரிகிறார்.*

*முதலாளித்துவ வர்க்கத்திற்கு அதன் செல்வாக்கைப் பாட்டாளி வர்க்கத்தினுள் பரவச் செய்வதுதான் மிகவும் தேவைப்படுகிறது; பாட்டாளி வர்க்கத்தில்தான் அதற்கு மக்கள் திரளைத் தார்மிக வழியில் தனக்கு அடிபணிய வைப்பது மிகவும் கடினமாயுள்ளது. லாயிட் ஜார்ஜ் குறிப்பாய் இதே பாட்டாளி வர்க்கத்திடம்தான் முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வாக்கை எடுத்துச் சென்று பரவச் செய்கிறார்.*

## மார்க்சின் பெயரில் முதலாளித்துவத் தொழிலாளர் கட்சி

*எங்கெல்லாம் தொழிலாளர்களிடையே மார்க்சியம் செல்வாக்கு மிக்கதாயுள்ளதோ, அங்கு இந்த அரசியல் போக்கு, இந்த "முதலாளித்துவத் தொழிலாளர் கட்சி" மார்க்சின் பெயரில் தான் ஆணையிட்டுச் செயல் புரியும். இதைச் செய்யக் கூடாதென அதற்குத் தடை விதிக்க இயலாது. வர்த்தகக் கம்பெனி ஒன்று எந்தவொரு முத்திரையையோ, குறியையோ, விளம்பரத்தையோ உபயோகிக்கலாகாதெனத் தடை விதிப்பது எப்படி சாத்தியமற்றதோ அதே போலத்தான் இதுவும். ஒடுக்கப்பட்ட வர்க்கங்களிடையே செல்வாக்கு பெறும் புரட்சிகரத் தலைவர்கள் இறந்த பின், அவர்களுடைய பகைவர்கள் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை ஏமாற்றும் பொருட்டு அவர்களது பெயர்களைத் தமதாக்கிக் கொண்டு பயன்படுத்த முயலுவது வரலாற்றில் எப்பொழுதும் சகஜமாய் இருந்துள்ளது.*

## முதலாளித்துவத் தொழிலாளர் கட்சிகளுக்கு எதிரான போராட்டம்

*அரசியல் நிகழ்ச்சி என்ற முறையில் "முதலாளித்துவத் தொழிலாளர் கட்சிகள்" முதன்மையான முதலாளித்துவ நாடுகள் யாவற்றிலும் ஏற்கனவே நிறுவப் பெற்றுவிட்டன. இக்கட்சிகளை —இவை கட்சிகளாய் இராமல் கோஷ்டிகள், போக்குகள் முதலியனவாய் இருந்தாலும் ஒன்றுதான்— எதிர்த்து உறுதியாகவும் விடாப்பிடியாகவும் நெடுகிலும் போராட்டம் நடத்தினால் ஒழிய, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திற்கோ, மார்க்சியத்திற்கோ, சோசலிசத் தொழிலாளர் இயக்கத்திற்கோ வழி இல்லை.*

*சமுதாயப் புரட்சிக்கு முன்னதாகவே இக்கட்சிகள் மறைந்துவிடுமென நினைக்கச் சிறிதும் நியாயம் இல்லை. இதற்கு மாறாக, புரட்சி நெருங்க நெருங்க, அது மேலும் தீவிரமாய் மூண்டெழுந்து, அதன் வளர்ச்சியில் மாற்றங்களும் பாய்ச்சல்களும் மேலும் திடுதிப்பென்றும் வன்மை மிக்கதாகவும் ஆக ஆக, சந்தர்ப்பவாதக் குட்டிபூர்ஷ்வா பெருக்கை எதிர்த்துப் புரட்சிகர வெகுஜனப் பெருக்கு நடத்தும் போராட்டத்திற்கு தொழிலாளர் இயக்கத்திலுள்ள பங்கும் மேலும் மேலும் அதிகரித்துச் செல்கிறது.*

## சந்தர்ப்பவாதம் அபாயகரமானது

*காவுத்ஸ்கிவாதம் சுயேச்சையான ஒரு தனிப் போக்கல்ல, ஏனெனில் அதற்கு மக்கள் திரளிடத்தோ, முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் ஓடிவிட்ட சலுகை படைத்த பிரிவினரிடத்தோ வேர்களில்லை. ஆனால் காவுத்ஸ்கிவாதத்தின் அபாயமெல்லாம் கடந்த காலச் சித்தாந்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பாட்டாளி வர்க்கத்திடம் "முதலாளித்துவத் தொழிலாளர் கட்சி"யுடன் இணக்கம் பெறச் செய்வதற்கும், அக்கட்சியுடன் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையைப் பாதுகாக்கவும், இவ்வழியில் அக்கட்சியின் செல்வாக்கை உயர்த்தவும் அது மேற்கொள்ளும் முயற்சிகளில் அடங்கியிருக்கிறது. ... காவுத்ஸ்கிவாதிகள் மறைமுகமாய் சமூக-தேசிய*

வெறியர்களுக்குப் பாதுகாப்பும் ஆதரவும் அளிப்பதானது மேலும் அதிக அளவுக்கு அபாயகரமானதாகும்.

## மக்கள்திரள்: எண்ணிக்கையா? கொள்கையா?

"மக்கள் திரள்" என்பதாகப் பேசுவது காவுத்ஸ்கிவாதத்தின் சகஜமான குதர்க்கவாதங்களில் ஒன்றாகும். மக்கள் திரளிடமிருந்தும் வெகுஜன நிறுவனங்களிடமிருந்தும் தாம் முறித்துக் கொள்ள விரும்பவில்லை என்று காவுத்ஸ்கிவாதிகள் கூறுகிறார்கள்! ஆனால் எங்கெல்ஸ் இப்பிரச்சினையை எப்படி அணுகினார் என்பதைக் கவனிக்க வேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயத் தொழிற்சங்க "வெகுஜன நிறுவனங்கள்" முதலாளித்துவத் தொழிலாளர் கட்சியின் பக்கம் இருந்தன. இக்காரணத்தால் மார்க்சும் எங்கெல்சும் அதனுடன் இணங்கிச் சென்றுவிடவில்லை; அதற்குப் பதிலாக அதை அம்பலப்படுத்தி வந்தனர்.

முதலாவதாக, தொழிற்சங்க நிறுவனங்கள் பாட்டாளி வர்க்கத்தில் ஒரு சிறுபான்மைப் பகுதியை மட்டுமே தம்முள் நேரடியாகக் கொண்டிருந்தன என்பதை அவர்கள் மறக்கவில்லை. அன்று இங்கிலாந்தில், தற்போது ஜெர்மனியில் இருப்பது போலவே, பாட்டாளி வர்க்கத்தினரில் ஐந்தில் ஒரு பகுதிக்கு மேற்படாதோர்தான் நிறுவன ஒழுங்கமைப்பு உடையவர்களாய் இருந்தனர். முதலாளித்துவத்தில் பாட்டாளி வர்க்கத்தினரில் பெரும்பான்மையோரை நிறுவன ஒழுங்கமைப்பு பெறும்படிச் செய்ய முடியுமென யாரும் மெய்யாகவே கருத முடியாது.

இரண்டாவதாக, இதுவே இங்கு முக்கியமான விஷயம், முக்கியமாகக் கவனிக்க வேண்டியது நிறுவனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையல்ல, அதன் கொள்கையின் மெய்யான, எதார்த்த உள்ளடக்கமே ஆகும். அதன் கொள்கை மக்கள் திரளைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறதா, அது அவர்களுக்குச் சேவை புரிகிறதா, அதாவது அவர்களை முதலாளித்துவத்தில் இருந்து விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதா, அல்லது சிறுபான்மையோரான முதலாளிகளின் நலன்களையும் முதலாளித்துவத்துடனான அதன் இணக்கத்தையும் பிரதிபலிக்கிறதா? பின்னதுதான், பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இருந்த நிலைமை; தற்போது ஜெர்மனியிலும் வேறு பல நாடுகளிலும் இருக்கும நிலைமை.

எங்கெல்ஸ் சலுகை படைத்த சிறுபான்மையோரான பழைய தொழிற் சங்கங்களது "முதலாளித்துவத் தொழிலாளர் கட்சியையும்" மெய்யான பெரும்பான்மையோரான "கீழ் மட்டத்துப் பெருந்திரளையும் " வேறுபடுத்தி, "முதலாளித்துவ உயர்குல மனப்பான்மையால்" நச்சுப்படுத்தப்படாத பின்னவர்களுக்கே வேண்டுகோள் விடுக்கிறார். இதுவே மார்க்சியப் போர்த் தந்திரத்தின் சாராம்சம்!

## ஏகாதிபத்திய யுத்தமும் தாயகப் பாதுகாப்பாளர்களும்

பாட்டாளி வர்க்கத்தில் திட்டவட்டமாய் எந்த அளவுள்ள பகுதி சமூக-தேசிய வெறியர்களையும் சந்தர்ப்பவாதிகளையும் பின்பற்றுகிறது, இனி பின்பற்றப் போகிறது என்று நம்மாலோ அல்லது வேறு எவராலுமோ கணக்கிட்டுக் கூறிவிட முடியாது. இது போராட்டத்தின் மூலம்தான் புலப்படுத்தப்படும்; சோசலிசப் புரட்சியால் மட்டும்தான் இது திட்டவட்டமாய் முடிவு செய்யப்படும். ஆனால் ஏகாதிபத்திய யுத்தத்தில் "தாயகப் பாதுகாப்பாளர்கள்" சிறுபான்மையோரை மட்டுமே பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள் என்பது நமக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆகவே, நாம் சோசலிஸ்டுகளாய்த் தொடர்ந்து இருக்க விரும்பினால், கீழ்மட்டத்திற்கும் ஆழ்மட்டத்திற்கும், அதாவது மெய்யான மக்கள் திரளிடையே செல்வது நமது கடமையாகும். சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் முழுப் பொருளும் உள்ளடக்கமும் இதுவேதான்.

## சமூக தேசியவெறியர்கள் முதலாளி வர்க்கத்தின் கையாட்கள்

சந்தர்ப்பவாதிகளும் சமூக தேசிய வெறியர்களும் உண்மையில் மக்கள் திரளுடைய நலன்களுக்குத் துரோகமிழைக்கின்றனர், விலை பேசி அவற்றை விற்கின்றனர் என்பதையும், தொழிலாளர்களில் ஒரு சிறுபான்மையோரின் தற்காலிகச் சலுகைகளைப் பாதுகாத்து நிற்கிறார்கள் என்பதையும், முதலாளித்துவக் கருத்துக்களையும் செல்வாக்கையும் பரப்பும் சாதனங்களாவர் என்பதையும், உண்மையில் முதலாளித்துவ வர்க்கத்தின் கூட்டாளிகளும் கையாட்களுமாவர் என்பதையும் அம்பலம் செய்வதன் மூலம் நாம் மக்கள் திரளுக்கு அவர்களது மெய்யான அரசியல் நலன்களை உணர்ந்து கொள்வதற்கும், ஏகாதிபத்திய யுத்தங்கள், ஏகாதிபத்தியப் போர் நிறுத்த உடன்பாடுகள் இவற்றாலான நீண்ட நெடிய துயரப் பாதை நெடுகிலும் சோசலிசத்திற்காகவும் புரட்சிக்காகவும் போராடுவதற்கும் கற்றுத் தருகிறோம்.

## சமூக தேசியவெறியை அம்பலப்படுத்துவதே மார்க்சிய வழி

சந்தர்ப்பவாதத்திடமிருந்து பிளந்து செல்வது தவிர்க்க முடியாதது. இன்றியமையாதது என்பதை மக்கள் திரளுக்கு விளக்கிக் கூறுவதுதான், சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து அயராத போராட்டம் நடத்துவதன் மூலம் அவர்களுக்குப் புரட்சிக்கான போதம் பெறும்படிச் செய்வதுதான், யுத்த அனுபவங்களைத் தேசிய-மிதவாதத் தொழிற் கட்சிக் கொள்கையின் பரிபூரன இழிநிலையை மூடி மறைப்பதற்காக இல்லாமல், அதனை அம்பலப்படுத்துவதற்காகப் பயன்படுத்துவதுதான் உலகத் தொழிலாளர் இயக்கத்தில் பின்பற்ற வேண்டிய ஒரேயொரு மார்க்சிய வழி.

■

### ஜான் அட்கின்ஸன் ஹாப்சன்
(06-07-1858 – 01-04-1940)



ஜே. ஏ. ஹாப்சன் என்று பொதுவாக அறியப்படும் ஜான் அட்கின்ஸன் ஹாப்சன் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பொருளியல் அறிஞர், சமூகவியலாளர், சொற்பொழிவாளர் மற்றும் எழுத்தாளர். நிறைய நூல்களை எழுதியுள்ளார். இவருடைய ஆக முக்கியத்துவம் வாய்ந்த நூலான ‘இம்பீரியலிசம்’(Imperialism) 1902 ஆம் ஆண்டில் வெளிவந்தது. யுத்தங்களை தடுக்கும் வகையில் உலக அரசியல் அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கருத்துடையவராக இருந்தார். இந்தக் கருத்தை மையமாக வைத்து அவர் எழுதிய நூலான ‘டுவோர்ட்ஸ் இன்டர்நேசனல் கவர்மென்ட்’ (Towards International Government) 1914 ஆம் ஆண்டில் வெளிவந்தது. 1919 ஆம் ஆண்டில் “இன்டிபென்டன்ட் லேபர் பார்ட்டி’ (Independent Labour Party) யில் சேர்ந்தார். அந்தக் காலத்தில் அவருடைய எழுத்துக்கள் அவர் கம்யூனிசப் புரட்சியைவிட முதலாளித்துவ சீர்திருத்தங்களையே ஆதரித்தார் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டின.

# 'சார்பற்ற, நடுநிலையான' சுதந்திரம், ஜனநாயம், சமத்துவம், சமாதானம் என்ற முழக்கங்கள் மக்களை ஏமாற்றுபவை!

முதலாளித்துவ அமைப்பின் கீழ் ஜனநாயகமும் சுதந்திரமும் இருப்பதாகப் பொய்யாகப் பலர் பீற்றிக் கொள்கிறார்கள். கூட்டம் கூடும் உரிமையும் பேச்சுரிமையும் எழுத்துரிமையும் வழங்கப்பட்டிருப்பதாக நடிக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அரசுக்கும் ஆள்வோருக்கும் எதிரான உழைக்கும் மக்களின் போராட்டங்கள் கொடூரமாக ஒடுக்கப்படுகின்றன என்பதை நாமறிவோம்.

கூலி உழைப்பைச் சுரண்டுவதற்கும், அநீதியான வழிகளில் பொருள் சேர்ப்பதற்கும் முழுமையான சுதந்திரம் அளிக்கப்பட்டிருப்பது உண்மைதான். சுரண்டுவோருக்கும் அவர்களின் சகலவிதமான மோசடிகளுக்கும் முழு சுதந்திரம் அளிக்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அதற்கு எதிரான உழைக்கும் மக்களின் போராட்டங்களுக்கும், இயக்கங்களுக்கும் உண்மையில் தேவையான அளவிற்கு சுதந்திரம் வழங்கப்படவில்லை.

சுரண்டும் வர்க்கங்கங்களின் நலன்களுக்கான அரசமைப்பின்கீழ் சுதந்திரம், ஜனநாயகம் என்பவை எப்படி ஒரு பக்கச் சார்பாக இருக்கின்றனவோ அது போலத்தான் உழைக்கும் மக்களின் நலன்களுக்காக செயல்படுகிற அமைப்புகளின் அதிகாரத்தின் கீழும் இந்தக் கருத்தினங்கள் ஒரு பக்கச் சார்பாகவே இருக்க முடியும். இருக்க வேண்டும். வேறுபாடு என்னவென்றால் எந்த அரசு யாருடைய பக்கச் சார்பாக நடந்து கொள்கிறது என்பதுதான்.

உழைக்கும் மக்களின் ஜனநாயக அரசு அமைக்கப்பட்ட பின்னும் பக்கச் சார்பு என்பது இருக்கும். உழைக்கும் மக்களின் பக்கம் சார்ந்திருக்கும். வர்க்கப் போராட்டம் தொடரும். உண்மையில், முன்னிலும் அதிக கூர்மையடையும். முதலாளித்துவத்தை மீண்டும் மீட்டமைக்க விரும்பும் கூட்டங்களுக்கு அங்கே அனுமதி இல்லை. அனுமதி அளிக்க முடியாது. அத்தகைய சுதந்திரம் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு எதிரானது.

பொதுப்படையாக ஜனநாயகம் என்று பேசுவது ஒரு மோசடி. 'யாருக்கான ஜனநாயகம்?' என்ற கேள்விக்கு விடை காணப்பட வேண்டும். உண்மையில் நடைபெறும் விவாதங்கள் ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் இடையிலானவை அல்ல. முதலாளிகளின் அரசதிகாரத்திற்கும், உழைக்கும் மக்களின் அரசதிகாரத்திற்கும் இடையிலானது.

வர்க்கங்கள் இருக்கும்வரை 'பரிசுத்தமான ஜனநாயகம்' என்று ஒன்று இருக்க முடியாது. முதலாளித்துவ ஜனநாயம் என்பது முதலாளிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவே. அதுபோல உழைக்கும் மக்களின் ஜனநாயகம் என்பது மக்கள் தொகையில் ஆகப் பெரும் எண்ணிக்கையினரான உழைக்கும் வர்க்கத்தினரின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவே. உழைக்கும் மக்களின் ஜனநாயகம் எந்த ஒரு முதலாளித்துவ ஜனநாயக ஆட்சியை விடவும் பலமடங்கு அதிக ஜனநாயகத் தன்மை உடையது.

அதுபோல, சமத்துவம் என்ற முழக்கம் மூலதனத்தின் பிடியில் நசுக்கப்படும் உழைப்பை விடுவிக்காவிடில் போலித்தனமானதுதான். உண்மைச் சமத்துவம் வர்க்கங்களை ஒழிப்பதே.

வர்க்கங்களை ஒழிப்பது என்ற பொருளில் அல்லாமல் வேறெந்தப் பொருளிலும் நாம் அனைவரையும் சமமாக்குவதாக நடிப்போம் என்றால் சமத்துவம் ஒரு அபத்தமான சொல் ஆகிவிடும்.

சுதந்திரம், சமத்துவம் என்ற பெயரில் பேசப்படும் பொத்தாம் பொதுவான பேச்சுகள் மெய்யான சமத்துவத்திற்கான போராட்டங்களை மூடி மறைக்கின்றன. உழைக்கும் மக்களுக்கான அரசியலை முதலாளித்துவ அரசுக் கட்டமைப்புக்கு உள்ளேயே ஒடுக்கிவிட முயற்சிக்கின்றன. இது உழைக்கும் மக்களின் நலன்களுக்கான லட்சியத்திற்கு துரோகம் இழைப்பதாகும்.

மூலதனத்தின் பிடியில் அடிமைப்பட்டிருக்கும் கூலி உழைப்பை விடுவிப்பதற்கான போராட்டத்தின் நலன்களிலிருந்து பிரிக்கப்பட்ட அனைவருக்கும் பொதுவான, 'சுதந்திரம்', 'சமத்துவம்', 'ஜனநாயகம்' என்ற முழக்கங்கள் மக்களை ஏமாற்றுவதாகும்.

அதுபோலவே போர்க்காலங்களில் எழுப்பப்படும் சமாதானத்திற்கான முழக்கம் போலியானது. ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளின் அரசுகள் தங்கள் நாட்டு ஆளும் வர்க்கங்களின் நலன்களிலிருந்து போர்களை நடத்துகின்றன. குறிப்பாக, புவிசார் நலன்களையும், சந்தை நலன்களையும் மையமாகக் கொண்டு நடத்தப்படும் இத்தகைய போர்கள் நியாயமற்றவை. இப்படியான ஒரு நியாயமற்ற போர்நடத்தப்படும் காலத்தில் அந்தந்த நாடுகளின் உழைக்கும் மக்கள் தத்தம் ஏகாதிபத்திய, முதலாளித்துவ அரசுகளை எதிர்க்க வேண்டும். ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்ற முயற்சிக்க வேண்டும். ஏனென்றால், உண்மையான சமாதானம் ஏகாதிபத்திய, முதலாளித்துவ அரசுகள் தூக்கி எறியப்படும் போதுதான் சாத்தியமாகும். இதல்லாமல் சமாதானவாதிகள் போர்களின்போது பரப்பும் சமாதானம் பற்றிய பொதுவான முழக்கம் போலித்தனமும் ஏமாற்று வேலையும் ஆகும்.

எந்த வர்க்கம் போரை எந்த நோக்கத்திற்காக நடத்துகிறது என்று பார்க்கத் தவறுவது அறிவீனமாகும். ஏகாதிபத்திய, முதலாளித்துவ அரசுகளின் கீழ் போர்கள் நியாயமற்ற காரணங்களுக்காகவே நடத்தப்படுகின்றன. அத்தகைய நியாயமற்ற போரில் ஈடுபட்டுள்ள தங்கள் நாட்டு அரசுகளை ஆதரிக்கும், சோசலிஸ்டு மற்றும் கம்யூனிஸ்டு கட்சிகள் சந்தர்ப்பவாதக் கட்சிகள் ஆகும். தங்கள் 'தாய் நாட்டைக் காப்பாற்ற' ஏகாதிபத்திய முதலாளித்துவ அரசுகளின் நியாயமற்ற போர்களை ஆதரிக்கும் இந்தப் போக்கு சமூக தேசிய வெறியின் வெளிப்பாடு ஆகும். சந்தர்ப்பவாதிகளுடனும், சமூகதேசிய வெறியர்களுடனும் ஒரு உண்மையான உழைக்கும் மக்கள் இயக்கத்திற்கு எந்த உறவும் இருக்க முடியாது.

பொதுவாக சுரண்டும் வர்க்கங்களின் ஆதரவாளர்களான கருத்தியலாளர்கள் தங்களின் சார்புத் தன்மையை மறைத்துக் கொள்ளவே முயற்சிக்கின்றனர். தங்களை வர்க்கச் சார்பற்றவர்களாகவும், சித்தாந்தச் சார்பற்றவர்களாகவும் காட்டிக் கொள்கின்றனர். சுரண்டுகிற, ஒடுக்குமுறைகளை மேற்கொள்கிற நபர்களோடும், அமைப்புகளோடும் தங்களுக்குள்ள உறவை பகிரங்கமாக ஒத்துக்கொள்ள அவர்களால் முடியாது. அது பெரும்பான்மையான உழைக்கும் மக்களிடமிருந்து அவர்களைத் தனிமைப்படுத்திவிடும் என்ற பயம். சார்பற்ற நடுநிலை என்ற திரை மறைவில் சுரண்டும் வர்க்க ஆதரவான கருத்துக்களை மக்களிடையே பரப்புகின்றனர். இவர்களின் நோக்கம் மக்களை ஏமாற்றி சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் பாதுகாப்பதே. எனவே, சார்புநிலையற்ற அணுகுமுறை என்பதே பொய்யானதும் போலித்தனமானதும் ஆகும். ■

# கவுரி லங்கேஷ்

## தொடரும் இந்துத்துவ எதிர்ப்பாளர் படுகொலைகள்

*கவுரி லங்கேஷ் 1962 ஜனவரி 29 ஆம் நாள் பிறந்தார். கவுரியின் தந்தை லங்கேஷ் கன்னட வார இதழான 'லங்கேஷ் பத்திரிக்கே'வின் ஆசிரியர் மற்றும் கவிஞர். கவுரி லங்கேஷூக்கு இந்திரஜித் என்ற சகோதரரும் கவிதா என்ற சகோதரியும் உண்டு.*

*முதலில் 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் பெங்களூரு பதிப்பில் இதழாளராக தனது பணியைத் தொடங்கிய கவுரி திருமணத்திற்குப் பிறகு தனது கணவர் சித்தானந்த ராஜ்கட்டாவுடன் டெல்லிக்குக் குடிபெயர்ந்தார். கவுரியின் திருமண வாழ்க்கை ஆறு மாதங்களுக்கு மேல் நீடிக்கவில்லை. மீண்டும் பெங்களூருவுக்குத் திரும்பிய கவுரி 'தி சன்டே' இதழின் நிருபராக ஒன்பது ஆண்டுகள் பணிபுரிந்தார். 2000ஆம் ஆவது ஆண்டில் கவுரியின் தந்தை லங்கேஷ் மரணம் அடைந்தார். அப்போது கவுரி ஈநாடு என்ற தெலுங்கு தொலைக்காட்சி சேனலில் டெல்லியில் பணிபுரிந்து வந்தார். இதற்குள் ஏறத்தாழ 16 ஆண்டுகாலத்தை இதழாளராகக் கழித்திருந்தார்.*

*தந்தையின் இறப்பிற்குப் பிறகு லங்கேஷ் பத்திரிக்கே வார இதழை நிறுத்திவிடும் முடிவுக்கு கவுரியும் அவரது சகோதரர் இந்திரஜித்தும் வந்தனர். அந்த முடிவை அதன் வெளியீட்டாளர் மணி அவர்களிடம் சொன்னபோது அவர் அந்த முடிவை மாற்றிக் கொள்ளும்படி செய்ததுடன் கவுரியை அதன் ஆசிரியர் பொறுப்பேற்கச் செய்தார். இந்திரஜித் அதன் வணிகப் பொறுப்புகளைக் கவனித்துக் கொண்டார். ஓராண்டிற்குள்ளாகவே கவுரிக்கும் அவர் சகோதரர் இந்திரஜித்திற்கும் இடையே பத்திரிக்கையின் கோட்பாட்டுச் சார்பு தொடர்பாக கருத்து வேறுபாடுகள் வளர்ந்தன. ஆயினும் 2005 ஆம் ஆண்டு பிப்ரவரியில் காவல்துறை மீதான ஒரு நக்சலைட் தாக்குதல் தொடர்பான கட்டுரை பிரசுரமானபோதுதான் அது வெளிப்படையான மோதலாக வெடித்தது.*

*2005 பிப்ரவரி 13 அன்று அப்போது லங்கேஷ் பத்திரிக்கேவின் பதிப்பாளரும் உரிமையாளருமாக மாறியிருந்த கவுரியின் சகோதரர் இந்திரஜித் அந்த செய்தி நக்சலைட்டுகளை ஆதரிப்பதாகச் சொல்லி அதைத் திரும்பப் பெற்றார். மறுநாள் அவர் பத்திரிக்கை அலுவலகத்தில் இருந்து ஒரு கம்ப்யூட்டர், பிரிண்டர், மற்றும் ஸ்கேனர் ஆகியவற்றைத் திருடி எடுத்துச் சென்று விட்டதாக கவுரியின் மீது காவல்துறையிடம் புகார் அளித்தார். கவுரி தனது சகோதரருக்கு எதிராக தானும் ஒரு புகார் மனுவைக் காவல் துறையிடம் அளித்தார். அதில் இந்திரஜித் தன்னை ஒரு ரிவால்வரை வைத்து மிரட்டுவதாகக் குற்றம் சாட்டியிருந்தார். அதற்கு மறுநாள் இந்திரஜித் ஒரு பத்திரிக்கையாளர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்து கவுரி தனது பத்திரிகையின் மூலம் நக்சலிசத்தை பரப்புவதாகக் குற்றம் சாட்டினார். அதற்கெதிராகத் தனியாகத் தானும் ஒரு பத்திரிக்கையாளர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்த கவுரி, இந்திரஜித்தின் குற்றச்சாட்டுகளை மறுத்ததுடன் தனது சகோதரர் தனது சமூக நடவடிக்கைகளுக்கு எதிராக இருப்பதாகக் குற்றம் சாட்டினார். தொடர்ந்து தனியாக 'கவுரி லங்கேஷ் பத்திரிக்கே' என்ற கன்னட வார இதழை சொந்தமாகத் தொடங்கினார்.*

*கவுரி வலதுசாரி இந்துத்துவா கொள்கையைக் கடுமையாக விமர்சித்து வந்தார். பாபா பூதான் மலையில் அமைந்திருந்த குரு தத்தாத்தரேயா பாபா பூதான் தர்கா என்ற சூபி இஸ்லாமியர்களின் வழிபாட்டுத் தலத்தை இந்து வழிபாட்டுத் தலமாக மாற்றும் சங்க பரிவாரத்தின் முயற்சிகளைக் கடுமையாக எதிர்த்தார். 2013 ஆம் ஆண்டில் மங்களூருவில் மதவாத அமைப்புகளைத் தடை செய்யக் கோரிய ஒரு போராட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது "இந்துத்துவம் என்பது ஒரு மதமல்ல" என்றும்*

“பெண்களை இரண்டாம் தர உயிர்களாக நடத்தும் சமூகம் சார்ந்த ஒரு மேலாதிக்கப் போக்கு” என்று சாடினார். லிங்காயத்து சமூகத்தினரை சிறுபான்மை மதப்பிரிவாக்கக் கோரி, ஒடுக்கப்பட்ட சமூகத்தினருக்கான மத நல்லினக்க மேடையாகச் செயல்பட்ட ‘கோமு சவ்ஹர்த வேதிகே’ என்ற அமைப்பைத் தலைமையேற்று நடத்திவந்தார். அத்துடன் பசவன்னரின் வழியைப் பின்பற்றும் லிங்காயத்து சமூகத்தினர் இந்துக்கள் அல்ல என்ற கொள்கையையும் கொண்டிருந்தார். சாதி முறையை வெளிப்படையாகவே விமர்சித்து வந்தார். 2015 ஆம் ஆண்டு சிரவனபெலகொலாவில் நடைபெற்ற 81வது ‘கன்னட சாகித்திய சம்மேளன’த்தில் எஸ்.எல்.பைரப்பா என்ற பிராமன நாவலாசிரியரை விமர்சித்ததற்காக கடும் எதிர்ப்புகளுக்குள்ளானார். பைரப்பா தனது ‘பார்வா’ என்ற நாவலில் நியோக முறையை முன்வைத்து தமிழில் பெருமாள் முருகன் தனது மாதொரு பாகன் நாவலில் எழுதியிருப்பது போன்றே எழுதியிருந்தும் அவர் பிராமனர் என்பதால் எவரும் அதை எதிர்க்கவில்லை என்று சொல்லியிருந்தார். 2015 பிப்ரவரி 19 ஆம் தேதி ஹாசன் மாவட்டத்தைச் சேர்ந்த பிராமன சபாவினர் கவுரிக்கு எதிராகப் பேரணியாகச் சென்று கவுரி மீது குற்றச்சாட்டுப் பதியும்படி காவல்துறையிடம் கோரிக்கை வைத்தனர்.

2008 ஆம் ஆண்டு ஜனவரி 23 ல் வெளியான கவுரி லங்கேஷ் பத்திரிக்கே இதழில் பாரதீய ஜனதா கட்சியின் பிரஹலாத ஜோஷி, உமேஷ் துஷி, சிவானந்த பட் மற்றும் வெங்கடேஷ மேஸ்திரி ஆகியோருக்கு எதிராக ஒரு புலனாய்வுக் கட்டுரையை வெளியிட்டார். அதில் அவர்கள் ஒரு நகைவியாபாரியிடம் ஒரு லட்சம் ரூபாய்கள் மோசடி செய்ததாக எழுதியிருந்தார். இதன் மீது அவதூறு வழக்கு ஒன்று தொடரப்பட்டு கவுரி தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்த செய்திகளைப் போதுமான ஆதாரங்களுடன் நிரூபிக்கத் தவறிவிட்டார் என்று சொல்லி 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் தேதி ஒரு இரண்டாம் நிலை குற்றவியல் நீதிமன்றத்தால் ரூ.10ஆயிரம் அபராதமும் ஆறுமாதம் சிறை தண்டனையும் விதிக்கப் பெற்றார். எனினும் அதே நீதிமன்றம் அவருக்கு முன்ஜாமீன் வழங்கியதால் சிறையில் வைக்கப்படுவதிலிருந்து விலக்குப் பெற்றார். தண்டனைக்குப் பிறகும் குறிப்பிட்ட நிகழ்வில் தொடர்புடைய நகைவியாபாரியைத் தங்களது செல்வாக்கினால் பணியவைத்து தங்களுக்கு சாதகமான தீர்ப்பை பா.ஜ.கவினர் பெற்றுவிட்டதாகவே கவுரி குறிப்பிட்டார்.

மனமுறிவு பெற்றவரான கவுரிக்கு குழந்தைகள் இல்லை. ஆனால் அவர் போராளிகளான ஜிக்னேஷ் மேவானி, கன்ஹையா குமார், உமர் காலித் மற்றும் ஷீலா ரஷீத் சோராஆகியோரை தனது தத்துப் பிள்ளைகளாகவே பாவித்து வந்தார். அவர்கள் பெங்களூரு நகருக்கு வரும் போதெல்லாம் கவுரியின் வீட்டிற்கு அழைக்கப்படாமல் இருந்ததில்லை.

கடந்த 2017 செப்டம்டபர் 5ம் தேதி இரவு 8 மணியளவில் பெங்களூரு ராஜராஜேஸ்வரி நகரில் இருந்த தனது வீட்டிற்குக் காரில் திரும்பிய கவுரி, காரில் இருந்து இறங்கி வீட்டின் பிரதான வாயிற் கதவைத் திறந்த போது வெளியே மறைந்திருந்த அடையாளம் தெரியாத நபர்கள் அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துவிட்டுத் தப்பினர். மூன்று குண்டுகள் அவரது தலை, கழுத்து மற்றும் மார்பைத் துளைத்திருந்தன. கவுரியின் வீடு மற்றும் அந்தத் தெருவில் இருந்த வேறு சில கண்காணிப்புக் காமிராக்களின் பதிவுகளைக் கைப்பற்றி காவல்துறையினர் கொலையாளிகளைத் தேடி வருகின்றனர். கொலையாளிகள் ஒரு சிவப்பு நிற பஜாஜ் பல்சர் மோட்டார் சைக்கிளில் அங்கு வந்திருப்பது தெரியவந்துள்ளது. கர்னாடக அரசு கொலையாளிகளைப் பிடிப்பதற்கென்று ஒரு சிறப்புப் புலனாய்வுப் படையை அமைத்திருப்பதோடு கொலையாளிகள் குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு 10 லட்சம் ரூபாய் சன்மானம் வழங்குவதாகவும் அறிவித்திருக்கிறது.



நரேந்திர தபோல்கர், கோவிந்த பன்சாரே மற்றும எம்.எம்.கல்புர்கி ஆகியோரைக் கொலை செய்தவர்களுக்கும் கவுரி லங்கேஷ் கொலைக்கும் தொடர்பிருக்கலாம் என்ற கோணத்திலும் ஆய்வுகள் நடந்து வருகின்றன. ஆயினும், சிறப்புப் புலனாய்வுப் படையின் தலைவர் அந்தக் கொலைகளுக்கும் இதற்கும் ஒற்றுமைகளும் இருக்கின்றன, வேற்றுமைகளும் இருக்கின்றன எனவே தற்போதைக்கு எதுவும் கூறமுடியாது என்று மறுத்துள்ளார். கண்காணிப்புக் காமிராக்கள் மற்றும் கொலையாளிகளை நேரில் பார்த்தவர்கள் என்ற பலரும் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் இரண்டு கொலையாளிகளின் தோராயமான படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் கோவாவைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ‘சனாதன் சன்ஸ்தா’ என்ற இந்துத் தீவிரவாத அமைப்பின் தலைமறைவான 5 உறுப்பினர்களுக்குத் தொடர்பிருக்கலாம் என்ற செய்திகளையும் திட்டவட்டமாக மறுப்பதற்கில்லை. சிறப்பு புலனாய்வுப் பிரிவு வெளியிட்டுள்ள படங்களில் ஒன்று அவர்களுள் ஒருவரின் தோற்றத்தை ஒத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. மேலும் கவுரி கொலையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் 7.5 மிமீ நாட்டுத் துப்பாக்கி போன்ற துப்பாக்கியே தார்வாடில் நடந்த கன்னட எழுத்தாளர் எம்.எம்.கல்புர்கி கொலையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும், கவுரி கொலையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் துப்பாக்கிக் குண்டுகள் 2013ல் நடந்த நரேந்திர தபோல்கர் கொலையிலும், 2015ல் கோவிந்த பன்சாரே கொலையிலும் பயன்படுத்தப்பட்ட குண்டுகளை ஒத்திருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. முன்னரே மகாராஷ்டிரா மாநிலத்தில் தபோல்கர், பன்சாரே கொலை தொடர்பாக விசாரித்துவரும் சி.பி.ஐ., அதில் சனாதன் சன்ஸ்தாவிற்கும் அதனுடன் இணைந்த ‘ஹிந்து ஜனஜாக்ருதி சமிதி’ என்ற அமைப்பிற்கும் தொடர்பிருக்கலாம் என்ற கருத்தை வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கவுரி கொலை சம்பவத்திற்கு எதிராகப் போராடிவரும் ‘கவுரி லங்கேஷ் கட்ய விரோதி வேதிகே’ அமைப்பின் தலைவர் கே.லீலா அவர்கள் கவுரி லங்கேஷ் கொலையில் துப்புத் துலக்குவதை விரைவுபடுத்த வேண்டும் என்றும் குற்றவாளிகளை மட்டும் அல்லாது அவர்களை ஏவிவிட்டவர்களையும் தண்டனைக்கு உட்படுத்தவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

---

தொடர்பு முகவரி:
ஆசிரியர், நிகரன், 3/806, எம்.ஜி.ஆர்.நகர், ஆலங்குளம் - 626127.
வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு.
பேச: 9486648145 இ-மெயில்: nikarantamil@yahoo.com